பக்கங்கள்: 20 FREE COPY விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 25, வெள்ளிக்கிழமை 07.04.2017 கதிர் 153


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

### நாடாளுமன்றத்தில் நேற்று

# ஜெனீவா விவகார விவாதம் இழுபறியால் நடக்கவில்லை

## விடாப் பிடியாக கூட்டு எதிரணி அடம்பிடிப்பு அமளிதுமளியால் சபை அமர்வு ஒத்திவைப்பு



கொழும்பு, ஏப்ரல் 07


**ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒட்டி நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெறவிருந்த விசேட விவாதம், அதற்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் கூட்டு எதிரணி விடாப்பிடியாகக் கிளப்பிய சர்ச்சையாலும், அமளிதுமளியாலும் நடக்க முடியாமல் போயிற்று. அந்த விவாதத்தை நடத்தாமலேயே சபையை ஒத்திவைத்தார் சபாநாயகர்.**

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரியா முன்னிலையில் கூடியது. வழமையான விடயங்கள் முடிவுற்றதும் சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணையைக் கூட்டு எதிரணி கொண்டு வந்தது.

விவாதத்தை ஆரம்பிக்குமாறு கூட்டு எதிரணியின் உறுப்பினர் தினேஷ் குண வர்த்தனாவை சபாநாயகர் அழைத் தார். அவரின் உரையுடன் சர்ச்சை ஆரம் பித்தது.

பக்கம் 18 »

## ஆவணங்களுடன் தயாராகவே வந்த சம்பந்தன் ஏமாற்றத்துடன் திரும்பினார்!



கொழும்பு, ஏப். 07

ஜெனீவா விடயத்தை ஒட்டி நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெறவிருந்த விவாதத்தில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும், உறுதியாகவும், வெளிப்படுத்துவதற்குப் பல்வேறு ஆவணங்கள் சகிதம் சபைக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்,

பக்கம் 18 »

## திட்டமிட்டே விவாதத்தை அரசுத்தரப்பு குழப்பியது என்கிறது கூட்டு எதிரணி!

### இராணுவத்துக்கும் இதனால் பெரும் அநீதியாம்

கொழும்பு, ஏப். 07

"நாட்டுக்கும் இராணுவத்துக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானம் பெரும் பாதிப்பாக இருந்தது. அதை நாட்டு மக்களுக்கு விளக்குவதற்கு கூட்டு எதிரணி கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை அரசுத் தரப்பினால் திட்டமிட்டே குழப்பியடிக்கப்பட்டது."

- கூட்டு எதிரணியின் எம்.பியான டலஸ் அழகப்பெரும இப்படி ஒரு குற்றச் சாட்டை வெளியிட்டார்.

இந்தவிடயம் குறித்து அவர் கூறியவை வருமாறு:-

இந்த விவாதத்தில் கலந்து கொள்ள அரசு தயார் நிலையில் இல்லை என்பது

பக்கம் 18 »

## சிலாவத்துறை, முள்ளிக்குளம் முகாம்கள் அகற்றப்படமாட்டா என்கிறார் பிரதமர்



கொழும்பு, ஏப்.07

சிலாவத்துறை மற்றும் முள்ளிக்குளம் பகுதிகளில் உள்ள கடற்படை முகாம்கள் அகற்றப்படமாட்டா. அவை தந்திரோபாய ரீதியில் படையினருக்கு முக்கியம்.

-இவ்வாறு திட்டவட்டமாக நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் பிரதமர்

பக்கம் 18 »

### மைத்திரி, மஹிந்தவுக்கு தலா ரூ.3 1/2 கோடிக்கு வாகன வரிச் சலுகை!

கொழும்பு, ஏப். 07

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரிச் சலுகை அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட

பக்கம் 18 »

## காணமலாக்கப்பட்ட ஒரு லட்சம் பேர் குறித்த விசாரணைக்கு கோருகிறது மன்னிப்புச்சபை

இலங்கையில் யுத்தம் காரணமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஒரு லட்சம் பேர் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை சர்வதேச மன்னிப்புச்சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப் பட்டவர்கள்

பக்கம் 18 »




### ஆறுதலின் கருத்துான்றல் களம்

ஆறுதல் நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்ற கருத்தூன்றல் களத்தின் பதின் மூன்றாவது கலந்துரையாடலில் "வடமாகாண அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் சவால்களும்" (Opportunities and Challenges for Northern Development) என்ற தொனிப்பொருளில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன் கருத்துரை வழங்குவார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

இடம்:- ஆறுதல் நிறுவனம். இல.51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம்:- 09.04.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு 021 221 7092

### அளப்ப அருணாசலம்



இப்ப... எல்லாச் சபையிலையும் சண்டை, சச்சரவுதான் பாருங்கோ...!

## சி.வி. எதிர் சி.வீ.கே.; கருத்துச் சமர்!




(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணசபையில் நேற்று முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனுக்கும் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்திற்கும் இடையே கருத்து முரண்பாடு இடம்பெற்றது. பின்னர் இம்முரண்பாடு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தால் சமாளித்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள் எவரும்

பக்கம் 18 »



# யுத்தக் குற்றம் நடைபெறவில்லை என்றால் ஐ.நாவில் கால அவகாசம் கோரியது எதற்கு?

(எஸ்.நிதர்ஷன்)

யுத்தக் குற்றம் நடைபெறவில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறினால், ஐ.நா. மனித உரிமை பேரவைக்குச் சென்று இலங்கை அரசு ஏன் கால அவகாசத்தைக் கோரியது?

-இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.


இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யுத்தத்தின்போது யார் குற்றமிழைத்தாலும் அது மனித குலத்துக்கு எதிரான குற்றமே. எனவே, இது தொடர்பில் விசாரணை நடத்தி உண்மை கண்டறியப்பட வேண்டும்.

அரச அமைச்சர்களுள் ராஜித சேனாரட்ண தமிழ் மக்களுக்கு வேண்டியவர். அவர் யுத்தக் குற்றம் தொடர்பில் எதைக் கூறினார் என்று எனக்குத் தெரியாது. எங்களுடைய பத்திரிகைகள் அவர் சொன்ன கருத்து தொடர்பில் என்ன செய்திவெளியிட்டிருக்கின்றன என்றும் எனக்குத் தெரியாது.

அவர் ஒரு வேளை யுத்தக் குற்றங்கள் நடைபெறவில்லை என்று கூறும் போது, இங்கு நடைபெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரித்து தீர்மானிக்கப்படவில்லை என்று அர்த்தத்தில் கூறியிருக்க கூடும்.

## ராஜிதவின் கருத்தை அடுத்து வடக்கு முதல்வர் கேள்வி



யுத்தக் குற்றம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும், விசாரணைகள் மூலம் உண்மை கண்டறியப்பட வேண்டும்

ஆகவேதான் நாங்கள் என்று கூறுகின்றோம்.

ஒரு சம்பவம் நடைபெற்றதா? இல்லையா? - என்பது அது தொடர்பிலான விசாரணை நடைபெற்ற பின்னர் தான் அறிய வேண்டும். அவ்வாறான விசாரணை நடப்பதற்கு முதல் எவரும் சொல்ல முடியாது - அந்தச் சம்பவம் நடக்கவில்லை என்று.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிழை செய்தார்களா? இல்லையா?- என்பதும் தெரியாது. அதற்கு உரியவாறு சட்டப்படி என்ன நடவடிக்கை எடுத்து விசாரணை செய்ய வேண்டுமோ அந்த விசாரணைகளை நடத்துங்கள்.

யுத்தத்தின்போது யார் குற்றங்கள் செய்தாலும், அந்தக் குற்றங்கள் மக்களுக்கு எதிரான குற்றங்களாகவே நடைபெற்றிருக்கின்றன. மக்களுக்கு எதிரான குற்றங்கள் யார் செய்தாலும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவை மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள்.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அந்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில்தான் ஜெனீவா சென்று நடவடிக்கை எடுக்கின்றோம் என்று அரசு கூறிவருகின்றது. அரசு இந்த அமைச்சரின் கருத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், ஜெனீவாவில் அவர்களின் நடவடிக்கை பொருத்தமானதாக இருக்காது.- என்றார். (ஐ)

## இசைமாலை வெளியீடு!

சங்கீதபூஷணம் அமரர் சி. ஆறுமுகம்பிள்ளையின் ஞாபகார்த்த இசைமாலை வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுத பிள்ளை மண்டபத்தில் உள சமூக சீராளன் செ.யோசப்பாலா தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வர். (ஐ)

## கருத்தரங்கு

யாழ். முகாமையாளர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள ''வடக்கு - கிழக்குக்கான வர்த்தக சூழ்நிலை வளர்ச்சி'' தொடர்பான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு, நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இந்தக் கருத்தரங்கின் வளவாளராக கனேடியத் தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் அங்கத்தவரான பொறியியலாளர் அருண் நவரட்ணம் கலந்து கொள்வார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி யாழ். முகாமையாளர் சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.(உ)

## மூதாட்டியின் மரணத்தில் சந்தேகம்: இறுதிக் கிரியைகள் நிறுத்தம்

### சடலத்தை எடுத்துச் சென்ற பொலிஸார்

தென்மராட்சி.ஏப்.07

இறுதிக் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வீடு ஒன்றுக்குச் சென்ற பொலிஸார், இறந்த மூதாட்டியின் சடலத்தை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வரணி இயற்றாலையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:-

இந்தப் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகி(வயது-87) என்னும் மூதாட்டி வீட்டுக்கு அருகில் உள்ள குளத்தில் குளிக்கச் சென்றிருந்தார்.

சிறிது நேரத்தின் பின்னர் அங்கு குளிக்கச் சென்ற பெண்ணொருவர் மூதாட்டியின் சடலம் குளக்கரையில் இருப்பதை அவரது பிள்ளைகளுக்கு அறிவித்துள்ளார்.

அங்கு சென்ற மூதாட்டியின் பிள்ளைகள் சடலத்தை எடுத்துச் சென்று இறுதிக் கிரியைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கோ, கிராம சேவகருக்கோ தகவல் வழங்கவில்லை.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக இனந்தெரியாதோர் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலை அடுத்து அங்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் சடலத்தை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான், பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சி.சி. இளங்கீரன் மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி, மரணம் தொடர்பாக உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திய பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## ஏப்ரல் 15 வரை இலங்கைக்கு அக்கினி வெயில்



ஏப்ரல் 15ஆம் திகதிவரை இலங்கைக்கு சூரியனின் உச்சபட்ச தாக்கம் இருப்பதால் கடுமையான உஷ்ண நிலை காணப்படும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நேர்மேலாக சூரியன் சஞ்சரிப்பதால் நாட்டின் பல பாகங்களில் வெப்பநிலை 30 பாகை செல்சியஸ்க்கு அதிகமாக இருக்கும் எனவும் வானிலை அவதான நிலையத்தின் அதிகாரி திருமதி நதீகா ரணவீர தெரிவித்திருக்கிறார்.

சூரியனின் தாக்கம் அதிகரிப்பதால் காற்றின் வேகம் குறைவடையும் எனவும், அதனால் வெப்பநிலை அதிகரித்தே காணப்படும் எனவும் அவர் கூறினார். (ஐ)

## சனசமூக நிலைய புதிய கட்டடம் திறப்பு

தென்மராட்சி, ஏப்.07

சரசாலை வடக்கு சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சனசமூக நிலைய தலைவர் பே.கந்தசாமி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதன் கலந்து கொள்வர். (ஐ-21)

## கடற்படை மருத்துவமனை பணிப்பாளர் நேற்று கைது!

கொழும்பு, ஏப்.07

கொழும்பில் தமிழர்களைக் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் கடற்படை மருத்துவமனையின் பணிப்பாளர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்ட யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில், 2006 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவுற்றதன் பின்னரும் 2011 ஆம் ஆண்டு வரை கொழும்பு மற்றும் முக்கிய நகரங்களில் தமிழ் மக்கள் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனையில் இரண்டு தமிழர்களைக் கடத்திக் காணாமற்போகச் செய்த குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரின் வெலிசறை மருத்துவமனையின் முன் னாள் பணிப்பாளர் அனில் தம் மிக்க நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் லெப்டினனட் கொமாண்டர் அனில் தம்மிக்க என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு மேலதிக மாஜிஸ் திரேட் பிரசாத் சில்வா முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## இந்திய மீனவர்களது அத்துமீறல்; குழு அமைத்து விசாரிக்க முடிவு

### கடற்றொழில் அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.07

இந்திய மீன்பிடி வள்ளங்களின் அத்துமீறல் தொடர்பில் குழு அமைத்து அதன் அடிப்படையில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீனவர் சங்க பிரதிநிதிகளுடனான பேச்சில் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.


அமைச்சில் நடைபெற்ற பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கும் அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு மீனவ பிரதிநிதிகள் இந்திய வள்ளங்கள் தொடர்பில் குழு அமைக்கப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இதற்குப் பதிலளிக்கையில், இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட - சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட - வள்ளங்களை விடுவிப்பது தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் குழுவின் அறிக்கைக்கு மதிப்பளிக்கப்படும்.



இந்தச் சந்திப்பில் வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டது.

இந்திய மீனவர்களின் ஊடுருவல், தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களின் பயன்பாடு, மீனவர்களின் நலன்புரி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் பற்றிப் பேசப்பட்டன.

இந்திய மீனவர்களின் பிரச்சினை பற்றி ஆராய மற்றுமொரு சுற்றுப் பேச்சுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் இரு நாடுகளையும் சேர்ந்த உயர்அதிகாரிகள் கலந்து கொள்வார்கள்.- என்றார்.(ஐ)

# வடக்கு மாகாண அலுவலகங்களில் 1252 அலுவலர்களுக்கு வெற்றிடம்

### நியமிக்கக் கோரி ஆளுநருக்கு கடிதம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்கள்மற்றும்திணைக் களங்களில் ஆயிரத்து 252 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்களுக்கு வேலையற்ற பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணத்தில்உள்ள வேலையற்றபட்டதாரிகள்தங்களுக்கு நியமனம்வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து காலவரையறையற்ற போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர், அவைத் தலைவர் மற்றும் பல தரப்புக்களைச் சந்தித்து தமது நியமனத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மாகாண அமைச்சுக்கள்மற்றும்திணைக் களங்களில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை அடையாளம் கண்டு வழங்குமாறு அவைத்தலைவர்திணைக் களத்தலைவர்களுக்கு அறிவித்திருந்தார். அது தொடர்பானதரவுகள் வழங்கப்பட்ட நிலையில், ஆயிரத்து 252 வெற்றிடங்கள் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அபிவிருத்திஉத்தியோகத்தர் பதவிக்கு 180 வெற்றிடங்கள், சுகாதார அமைச்சில் 22 வெற்றிடங்கள், முதலமைச்சர்அமைச்சில் 15 வெற்றிடங்கள், கல்வி அமைச்சில்1051வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்களுக்கு வேலையற்ற பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறுவடக்குஆளுநரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் நடத்திவரும் நிலையில், அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வடக்கு மாகாண சபை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார். அந்தக் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவைத் தலைவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

கடந்த 2017.03.14 ஆம் திகதி பட்டதாரிகள் விடயம் தொடர்பில் சபையில் பேசப்பட்டதற்கு இணங்க 2017.03.18 ஆம்திகதிவடக்குமாகாணஆளுநருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. - எனவும் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். (ம)

# வடக்கு மாகாண சபை சில்லறைக் கடை அல்ல! சில்லறைத்தனமாக விமர்சிப்பதை நிறுத்துங்கள்!!

### எம்.பிக்களுக்கு சிவஞானம் கடுந்தொனியில் ஆலோசனை

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.07

வடக்கு மாகாண சபை சில்லறைக் கடை அல்ல. எனவே, மாகாண சபையை சில்லறைத் தனமாக விமர்சிப்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிறுத்திக் கொள்ளவேண்டும் என, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்நேற்றுகடும் தொனியில் கூறினார்.

வடக்கு மாகாண சபை இதுவரை என்ன செய்தது எனக் கேட்பவர்கள் நேரடியாக சபையின் நூலகத்திற்குவந்துஅங்குஇருக்கின்ற முன்னேற்ற அறிக்கைகளைப் பார்க்க முடியும். அதன் பின்னர்மாகாணசபையைவிமர்சிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

குறிப்பாக மாகாண சபை நியதிச்சட்டங்களைநிறைவேற்றவில்லைஎன்றும்அதற்குஅவைத் தலைவரேதடையாகஇருக்கிறார் என்றும் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான சில்லறைத்தனமான கருத்துக்கள் எங்களுக்கு வலியை ஏற்படுத்துகின்றன.

இந்தச் சபையில் ஏற்கனவே நியதிச்சட்டங்களைநிறைவேற்றி இருக்கின்றோம். தற்போதும் நியதிச்சட்டங்களைநிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். இவை இலகுவான செயல்கள் அல்ல. இருந்தும் நாம் அவற்றைச் செய்கின்றோம்.

வடக்கு மாகாண சபை செய்கின்ற விடயங்களைத் தெரியாதவர்களேவிமர்சிக்கின்றனர். சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தற்போது வரை 335 தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றோம். அத்தீர்மானங்கள் பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதற்கமைய பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, தேவையற்ற வகையில் மாகாண சபையை விமர்சிப்பதை அனைவரும் நிறுத்திக் கொள்ள வேண்டும். - என்றார். (ம)

# ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பலர் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை

### நியமனங்களை இரத்துச் செய்யக் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நியமனம் கோரிதொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், அண்மையில் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் பலர் நேற்றுவரை கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என நேற்று மாகாண சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

அவ்வாறு கடமைகளைப் பொறுப்பேற்காதவர்களின் நியமனத்தை இரத்துச் செய்து அறிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றபோதே மேற்படி விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

வேலையில்லா பட்டதாரிகள் போராட்டம் நடத்துகின்றனர். இந்நிலையில் கடந்த மாதம் வடக்கு மாகாண சபை பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கியது.

நியமனம் பெற்றவர்களில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற கஷ்டப் பிரதேசப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட பலர் இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை. அவர்களுக்கான நியமனக் கடிதத்தில், அடுத்துவரும் 14 நாள்களுக்குள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவர்கள் இதுவரை பொறுப்பேற்கவில்லை. ஆனால், நியமனங்களும் இரத்துச் செய்யப்படவில்லை. எனவே, அவ்வாறு கடமைகளைப் பொறுப்பேற்காதவர்களின் நியமனங்களை இரத்துச் செய்து பரீட்சையின் அடிப்படையில் அடுத்த நிலைகளில் உள்ளவர்களுக்கு அந்த நியமனங்களை வழங்க வேண்டும். - என வலியுறுத்தப்பட்டது.

மேலும், பட்டதாரிகளுக்கான நியமனங்கள் மாவட்ட அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டுமென்று சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் வழங்கிய நியமனங்களில் அரசியல் தலையீடுகள் அதிகளவில் காணப்பட்டன.

அதிலும், பாடசாலைகளின் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. சில இடங்களில் தேவையான பாடசாலைகளுக்கு நியமிக்கவில்லை. சில இடங்களில் தேவைக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அத்துடன், துறைசார்ந்த அடிப்படையில் அவர்களது பாட நியமனங்கள் உள்வாங்கப்படவில்லை.

கடந்த கால ஆசிரியர் நியமனங்களின்போது அரசியல் தலையீடுகள், செல்வாக்குகள் அதிகம் காணப்பட்டன. அதனால், கஷ்டப்பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்ட பலர் ஒரு மாத காலத்திற்குள்ளேயே அங்கிருந்து இடமாற்றங்களைப் பெற்றுள்ளனர். அதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன.

அவ்வாறான இடமாற்றங்களை வழங்கியவர் யார்? அதற்கான சிபார்சுகளைச் செய்தவர் யார்? - என்பனவற்றை வெளிப்படுத்த வேண்டும் எனவும் உறுப்பினர்கள் வலியுறுத்தினர். (ம)

# வடக்கு மாகாண சபையில் நேற்று 2 நியதிச்சட்டங்களுக்கு அங்கீகாரம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையில் நேற்று முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கொண்டுவந்த மாகாண சுற்றுலாப் பயணத் துறை அதிகாரசபைநியதிச்சட்டம், மாகாண நீதிமன்ற குற்றப் பணங்கள் மற்றும் தண்டப் பணங்கள் கைமாறுவதற்கான நியதிச் சட்டம் ஆகிய இரண்டு நியதிச் சட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மாகாணசபையின்நேற்றைய அமர்வின்போது, முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்படி இரு நியதிச்சட்டங்களையும் சபையில் சமர்ப்பித்தார். அதையடுத்து அவை குழுநிலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த விவாதங்களின் போது இரு சட்டங்களிலும் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடுகள் இன்றி இரு தரப்பும் இணைந்து சில திருத்தங்களை முன்வைத்தன. இறுதிவடிவம்பெற்றமேற்படி நியதிச்சட்டங்களைமுதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்மொழிய எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வழிமொழிந்தார்.

அதையடுத்து நியதிச் சட்டங்கள் முழுமையாக அங்கீகரிக்கப்படுகின்றன எனவும் அவை உரிய தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அறிவித்தார்.

இதேவேளை, வடக்குமாகாண சபை நியதிச்சட்டங்களை உருவாக்கவில்லைஎன்றகுற்றச்சாட்டு இருந்து வந்த நிலையில், இரு சட்டங்கள் தற்போது கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவும் தொடர்ந்து மேலும் சில நியதிச்சட்டங்கள் கொண்டு வரப்படும் எனவும் நேற்று சபையில் தெரிவிக்கப்பட்டது. (ம)

# வட மாகாண சபை அமர்விற்கு தலைமை ஏற்க மேலும் இருவர்

### தாமதத்தை தவிர்க்க புதிய உத்தி

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் மற்றும் பிரதி அவைத் தலைவர் ஆகிய இருவரும் சபையில் இல்லாதபோது சபைக்குத் தலைமை தாங்குவதற்காக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ஜி.ரி.லிங்கநாதன் ஆகிய இருவருமே நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கான அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் 90 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று, வியாழக்கிழமை பேரவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இந்த அமர்விலேயே மேற்படி இருவரும்சவையைநடத்துவதற்காகத்தெரிவுசெய்யப்பட்டனர்.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவராக சி.வீ.கே. சிவஞானம் பணியாற்றுகின்றார். பிரதி அவைத் தலைவராக வ.கமலேஸ்வரன் இருக்கின்றார். இவர்கள் இருவரும் சபையில் இல்லாதபோது சபையைத் நடத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

மாகாண சபையின் கடந்த 89 ஆவது அமர்வின்போது அவைத் தலைவர் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பிரதிஅவைத்தலைவரும்தனிப்பட்ட தேவையின் நிமித்தம் வெளியேசென்றமையால்உரிய நேரத்திற்குச் சபைக்குச் சமுகமளிக்கவில்லை. இதனால் நீண்ட நேரம் தாமதித்தே சபை தொடங்கியது.

இவ்வாறான நெருக்கடி நிலை, எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு சபையை நடத்த இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சங்கிலி அறுத்த கான்ஸ்டபிள்

கொழும்பு விகாரமாதேவி பூங்காப் பகுதியில் நேற்று முன்தினம் பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த - 85 ஆயிரம் ரூபா பெறுமதியான - தங்கச் சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டு ஓடிய ஒருவரை அந்தப் பெண்ணின் கணவரும், சிவில் பாதுகாப்புப் படையினரும் மடக்கிப் பிடித்து, அருகில் உள்ள கறுவாக்காடுப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். அப்போதுதான் சங்கிலி அறுத்த கள்வன், அந்தப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் கான்ஸ்டபிள் என்று தெரியவந்ததாம்! (உ)

# யாழ். உணவுத் திருவிழா நாளையும் மறுதினமும்!

யாழ்ப்பாணம், ஏப். 07

யாழ். உணவுத் திருவிழா (Jaffna Food Festival), நாளை சனிக்கிழமையும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9மணிமுதல்இரவு10மணிவரை யாழ். மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கையில்உள்ள அனைத்துவிதமான உணவுப்பொருட்களையும்வருபவர்கள் சுவைத்து மகிழலாம். அதுமட்டுமல்லாதுசிறுவர்களுக்கான விளையாட்டுப்பகுதி, இசை நிகழ்ச்சி, சமையல் நிகழ்வு, பெண்களுக்கான சமையல் போட்டிகள் இதுபோன்ற பல நிகழ்வுகள் அங்கே நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுக்கு அனுமதி முற்றிலும் இலவசமாகும்.

இந்த நிகழ்வை 'ரதி நிகழ்வு நிர்வாக' நிறுவனமும் 'ரி 24 நிகழ்வு நிர்வாக' நிறுவனமும் இணைந்துவழங்குகின்றன. (உ)

# முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி மக்கள் போராட்டம் தொடர்கிறது!



மன்னார், ஏப்.07

தமது சொந்த நிலத்தை மீட்பதற்காக முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக் குளம் மற்றும் மறிச்சிக்கட்டி ஆகிய இரு கிராம மக்களும் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது பூர்வீக நிலங்களில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றக் கோரி மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தில் உள்ள தமிழ் மக்கள் முன்னெடுத்து வருகின்ற கவனவீர்ப்பு போராட்டம் நேற்று 15ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

அத்துடன், முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட முஸ்லிம் மக்களின் வாழ்விடங்களையும் அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் வழங்கும் நிலங்களையும் சுவீகரிப்புச் செய்யும் புதிய வர்த்தமானிப் பிரகடனத்தை உடனடியாக இரத்துச் செய்யக் கோரி, மறிச்சிக்கட்டி பள்ளிவாசலுக்கு முன்பாக முஸ்லிம்மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போராட்டம் நேற்று 10 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## எங்கே போகிறது நம் கல்வித்துறை...?

**வடக்கு, கிழக்கின் கல்வி நிலைமை குறித்து மிக வேதனையான புள்ளி விவரத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.**

தற்போது வெளிவந்திருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சைப் பெறுபேறுகளின் புள்ளி விவரத் தரவுகள் எமது கல்வித் தரத்தின் யதார்த்த நிலைமையைத் தோலுரித்துக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு மாகாணம், மொத்தம் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பதாவது இடத்தையும், கிழக்கு மாகாணம் எட்டாம் இடத்தையும் பெற்றுள்ளன என்ற உண்மையை அவை இடித்துரைக்கின்றன.

கல்வியே தம் பெரும் சொத்து என்று வாழ்ந்த தமிழ் சமூகத்தின் இன்றைய பரிதாப நிலைமை இது.

கல்வியில் எமது உயர்வுகண்டு பொறாமையும் எரிச்சலும் கொண்ட தென்னிலங்கைப் பேரினவாத மேலாண்மை, கல்விப் பெறுபேற்றுத் தரத்தினால் உயர் கல்வி வாய்ப்பு தமிழர்களுக்குப் பெருமளவில் செல்வதைத் தடுப்பதற்காக, தகுதித் தரத்தைப் புறக்கணித்து, மாவட்ட ரீதியிலான - விகிதாசார அடிப்படையிலான - பல்கலைக்கழக அனுமதி முறையை நடைமுறைப்படுத்திய ஒரு காலம் இருந்தது.

அந்த முறைமை மீண்டும் வந்தால் கூட, இன்று அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண கல்வித் தரத்தை மேம்படுத்த முடியுமா என்பது தெரியவில்லை.

கடும் யுத்தத்துக்கு மத்தியிலும் கல்வித் தரத்தை உச்சமாகப் பேணியவர்கள் நாங்கள். 90 களின் இறுதியிலும் மிலேனியத்தின் ஆரம்பத்திலும் - யுத்தம் உச்சம் பெற்றிருந்த சமயங்களிலும் கூட - இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணமே மேற்படி பெறுபேற்றுப் பட்டியலில் மாகாணங்களின் வரிசையில் முதலாவதாக இருந்தது.

இன்று கிழக்கு மாகாணம் எட்டாவது இடத்தில். அதற்கு அடுத்துக் கடைசியாக வடக்கு மாகாணம். கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக நிலைமை இதுதான்.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானதும் முன்னணிப் பெறுபேறுகளை - ஒன்பது பாடங்களில் 'ஏ' சித்தி, எட்டுப்பாடங்களில் 'ஏ' சித்தி - பெற்றவர்கள், அவர்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்து ஆரவாரமாகப் பேசி கதை அளப்பதுடன் எம்மில் பலர் அடங்கி விடுவதுண்டு. ஆனால், இம்முறை வடக்கு மாகாணத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 17 ஆயிரத்து 413 பேரில் ஆக 10 ஆயிரத்து 562 பேரே ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெற்றனர் என்பதும், தோற்றியவர்களில் 779 பேருக்கு ஒரு பாடத்தில் தன்னும் ஒரு சாதாரண சித்தி கூடக் கிட்டவில்லை என்பதும் எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

வடக்கு, கிழக்கில் கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பான மாகாணக் கல்வி அமைச்சு தமிழர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமே உள்ளது என்பதும் மறைக்கக் கூடியதன்று.

தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வரும் எமது கல்வித்துறையைச் சீர் செய்வதற்கு என்ன ஆக்கபூர்வமான முயற்சியை எடுத்திருக்கிறோம் என்று கல்வித்துறை நிர்வாகத்தில் தன் தனித்துவத்தை செயலில் நிரூபித்துக்காட்டி, யுத்தத்துக்கு மத்தியிலும் முன்னணிலைப் பெறுபேறுகளை வடக்கு, கிழக்குப் பெற்று மதிப்பார்ந்த நிலையை எட்டியமைக்கு உரிமையோடு பொறுப்பேற்கும் தரத்தில் உள்ள ஓய்வுபெற்ற மூத்த அதிகாரி ஒருவரிடம் கேட்டோம்.

"உங்கள் மாகாணத்தின் கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகிய மும்மூர்த்திகளையும் ஒன்றாக அமர்ந்திருந்து ஒரே பாணியில் சிந்தித்து, ஒருமித்த கருத்தில் கல்விக்காக முதலில் பணியாற்ற வையுங்கள். பிறகு எல்லாவற்றையும் சரிவர மாற்றுவது குறித்து சிந்திக்கலாம்." - என்று ஏளனப் பேச்சில் பதில் தந்தார் அவர்.

"இன்றைய இழிநிலைக்கு கல்வித்துறையில் ஒட்டுமொத்த அரசியல் தலையீடே பிரதான தடைக்கல். கல்வியில் அரசியல் தலையீடு எப்போது அற்றுப் போகின்றதோ அன்றுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வித்துறைக்கு விடிவு" - என்கின்றது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

ஆனால், இன்னொரு கல்வித்துறை நிர்வாகியோ, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு அதைக் கூறுவதற்குத் தகுதி இல்லை என்கின்றார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமே, தொழிற்சங்கம் என்ற பெயரில் கல்வி நிர்வாகத்தில் இழிவான அரசியலைத்தான் செய்கின்றது என அவர் குற்றம் சுமத்துகின்றார். வடக்கின் கல்வி நிலையும், எமது ஆசிரிய தொழிற்சங்கங்களின் தொழிற்பாட்டு முறைமையும் கூட ஒரே மாதிரியான கீழ் நிலையில்தான் உள்ளன. வடக்கு, கிழக்கின் கல்வி நிலைமையை மட்டுமல்ல, கல்வி சார் தொழிற்சங்கங்களையும் ஒழுங்குமுறையாக இயக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக அவர் கூறுகின்றார்.

நமது கல்விப் பெறுபேறுகள் மீண்டும் பழைய நிலைக்கு உயர வேண்டுமானால், கல்வி நிர்வாகம் தொடர்புடைய சகல விடயங்களிலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

ஆற்றல் உள்ள கல்வியாளர்கள் நம்மத்தியிலும், நம் புலம்பெயர் சமூகத்தவர் மத்தியிலும் உள்ளனர். அவர்களையும், நமது கல்வி நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர் தரப்பினர், பிரத்தியேக கல்வி நிறுவன அமைப்பினர் என இன்னோரன்ன பிரிவினர் எல்லோரையும் ஒன்றிணைத்து, ஓர் ஆர்முடுகல் முயற்சி முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதைச் செய்ய முன்வரப்போவது யாரோ...?

# கிளர்ச்சிப் பாதையில் மீண்டும் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது

## ஜே.வி.பி. தலைவர் அநுர கூறுகிறார்



கொழும்பு, ஏப்.07

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மீண்டும் ஒரு கிளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

46 ஆவது ஏப்ரல் வீரர்கள் தினத்தை ஒட்டி மொனராகலையில் நேற்று இடம் பெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இங்கு சாதாரணமான மக்களுக்கே சட்டம் சிறப்பாகச் செயற்படுகின்றது. சிறிய குற்றங்களுக்கெல்லாம் மக்கள் பெரிய தண்டனைகளால் தண்டிக்கப்படுகின்றார்கள். ஆனால் நாட்டில் பெரிய குற்றமிழைத்தவர்கள் சாதாரணமாக வெளியில் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். மிகப் பெரிய ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

அரசு அவர்களைக் கட்டுப்படுத்துவதாகத் தெரியவில்லை. இதனாலேயே இன்று நாமும் எமது சகோதரர்களின் கிளர்ச்சிப் பாதையில் பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. - என்றார்.

1971ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது உயிர்நீத்த ஜே.வி.பியின் உறுப்பினர்களை நினைவு கூர்ந்து மொனராகலை மற்றும் கேகாலைப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் ஜே.வி.பி. கட்சியினர் ஏப்ரல் வீரர்கள் தினத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கோரிக்கைகளை நிறைவேற்றாவிடில் ஏப். 10 முதல் பணிப்புறக்கணிப்பு!

## வடக்கு, கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.07

ரயில் கடவை காப்பாளர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால் வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக வடக்கு, கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர். எஸ்.ஜே.ரொஜான் ராஜ்குமார் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு ரயில் கடவைகாப்பாளர் ஒன்றியத்தின் விசேட கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மட்டக்களப்பு ஊறணி ரயில் கடவைக்கு அருகிலுள்ள தனியார் கல்வி நிறுவன மண்டபத்தில் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சீ.ஜெயகாந்தன் தலைமையில் இடம் பெற்றது. அதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 4 வருடங்களாக வடக்கு, கிழக்கில் 1230 பேர் ரயில் கடவைக் காப்பாளர்களாக நாள் ஒன்றுக்கு 250 ரூபா வீதம் மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்துக்கு கட்டாயத்தின் பேரில் எந்த விதமான நிபந்தனைகளும் இன்றி அடிப்படைத் தொழில் சட்டத்துக்கு முரணான விதத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டு நாள் ஒன்றுக்குக் குறைந்தது 8 மணித்தியாலம் கடமைகளைச் செய்து வருகின்றோம்.

இந்தநிலையில் எங்களுக்கு ரயில்திணைக்களத்துக்குரிய நேர அட்டவணை வழங்கப்படவில்லை. இதனால் ரயில் வருவதை அவதானித்து ஒருபக்கக் கடவையை மூடி மறுபக்கக் கடவையை மூடக்கூட நேரமில்லாத நிலையில் கடவைகளை பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் பாதுகாத்து வருகின்றோம்.

இவ்வாறு பணியாற்றி வருகின்ற நிலையில் தொடர்ந்து 180 நாள்கள் பணியாற்றினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். இருந்தும் இதுவரை எமக்கு நிரந்தர நியமனம் அல்லது தற்காலிக கடமையாளர்கள் என்று எந்த விதமான எழுத்து மூலமான கடிதங்கள் கூட வழங்கப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தென்னிலங்கையைச் சேர்ந்த ஆயிரம் பேரை புதிதாக ரயில் திணைக்கள ஊழியர்களாக நியமித்தார்.

இதனையடுத்து போக்குவரத்து அமைச்சர், பொலிஸ்மா அதிபர், ரயில் திணைக்கள பொது முகாமையாளர் போன்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து எமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். அதற்கு எந்தவிதமான தீர்வும் வழங்கப்படாததையடுத்து மதவாச்சியில் பிரதான ரயில் நிலையத்தை முற்றுகையிட்டு ரயில் சேவையை தடைசெய்தோம்.

அதனையடுத்து வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், விவசாய அமைச்சர் ஆகியோர் தலையிட்டு நடவடிக்கை எடுப்பார்கள் என எழுத்து மூலம் கடிதம் வழங்கிய பின்னர் அரசின் 24 திணைக்கள அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர், ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர், சிவில் பாதுகாப்பு பொறுப்பதிகாரி உட்பட பல அதிகாரிகள் எங்களை அழைத்து அவமானப் படுத்தி அச்சுறுத்தி அனுப்பினர்.

1985 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை ரயில் வீதிக் கடவை காப்பாளர்களுக்கான வெற்றிடம் சரியாக நிரப்பப்படவில்லை. இந்த நிலையில் ஆயிரத்து 200 பேரை புதிதாக ரயில் திணைக்கள ஊழியர்களாக நியமிப்பதற்கு பட்டியல் இடப்பட்டுள்ளது. அவர்களில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை. அதே வேளை எங்களைக்கூட உள்வாங்கவில்லை.

எமக்கு புதுவருட மற்றும் ஏனைய பண்டிகை காலங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்படும் புதுவருடக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். ரயில் திணைக்கள சிற்றூழியர்களாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேண்டும், அல்லது வீதி அதிகார சபையில் வீதி பராமரிப்பாளர்களாக இருக்கும் வெற்றிடங்களுக்கு எங்களை நியமிக்க வேண்டும். இவ்வாறான எமது அடிப்படைக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும். இல்லாவிடில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம்.- என்றார். (எ)


வீதி விபத்துக்களை தவிர்ப்போம்!
வாழ வேண்டிய வயதில், விபத்தில் காவு கொடுப்பது மிகப் பெருந் துன்பம்!!
சிறுவர்களுடன் நடந்து செல்லும் போது, அவர்களின் கையைப் பிடித்த வண்ணம் நடந்து செல்வோம்: அவர்களைப் பாதையின் ஓரப்பக்கத்தால் நடந்து வருமாறு பார்த்துக் கொள்வோம்.
தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை / மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

08.04.2017
சனிக்கிழமை

நட்சத்திரம்: பூரம் பி.இ. 1.30 வரை
திதி: துவாதசி மு.ப. 10.28 வரை

ராகுநேரம் : 3.07 - 4.37 வரை
இராகுகாலம் : 9.07 - 10.37 வரை

## திருமறைக் கலாமன்றத்தின் தவக்கால ஆற்றுகை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.07

திருமறைக் கலா மன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சி நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இந்த ஆற்றுகை இடம்பெற்று வருகிறது.

இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கும் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் மாலை 6.45 மணிக்கும் ஆரம்பமாகி இடம்பெறும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கு:
# கொழும்புக்கு மாற்றக் கோரும் மனு மீண்டும் மே 29 இல் நீதிமன்றுக்கு!

கொழும்பு, ஏப்.07

யாழ். கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கை யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு மாற்ற வேண்டும் எனக் கோரி மேற்படி வழக்கின் சந்தேக நபர்களான ஐந்து பொலிஸார் சார்பிலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் மே 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் எல். துரைராசா முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கிரந்த வரலியந்த ஆஜரானார்.

அச்சமயம் நீதிமன்றத்தில் பிரசன்னமாயிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சட்டத்தரணி கே.சயந்தனும் தாங்கள் இந்த வழக்குத் தொடர்பான சம்பவத்தில் உயிரிழந்த இரு மாணவர்களின் பெற்றோர்கள் சார்பிலும் நீதிமன்றத்தில் ஆஜாராகியிருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

குற்றச்செயல்களினால் பாதிப்புற்றோர் மற்றும் அது தொடர்பான சாட்சிகளைப் பாதுகாக்கும் புதிய சட்டத்தின் கீழ் இந்தவழக்கில்முன்னிலையாவதற்குத் தங்களுக்கு சட்ட உரிமை உள்ளது என்று அவர்கள் வாதிட்டனர். அதனை ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், சம்பந்தப்பட்ட மனு தொடர்பான ஆவணங்களின் பிரதிகளை புதிய சட்ட ஏற்பாட்டில் கூறியுள்ளபடி, ஆவணக் கட்டணம் ஏதுவுமின்றி, பாதிப்புற்ற நபர்களின் சட்டத் தரணிக்கு வழங்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவு பிறப்பித்தது. (உ)

## பொது எதிரணியின் மே தின நிகழ்வில் 20 லட்சம் பேர் கலந்து கொள்வார்களாம்!

கொழும்பு, ஏப்.07

காலிமுகத் திடலில் நடைபெறவுள்ள பொது எதிரணியின் மே தினக் கூட்டத்துக்கு 20 லட்சம் பேர்வரையில் எதிர்பார்க்கப்படுகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொது எதிரணியின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த காலங்களில் பொது எதிரணி நடத்திய பல்வேறு கூட்டங்கள் பற்றிக் கேலி பேசி வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்த முறை எமது மே தினக் கூட்டத்துக்கு வரும் பெருந்திரளான மக்களைப் பார்த்து அசந்துபோவது நிச்சயம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவையும், அவர்களது குடும்பத்தினரையும், இந்த நாட்டுக்காக தங்களது உயிர்களைத் தியாகம் செய்திருக்கும் முப்படையினரையும் எள்ளி நகையாடிக் கொண்டிருக்கும் இந்த அரசுக்கு காலிமுகத் திடலில் கூடவுள்ள லட்சக் கணக்கான மக்கள் நல்ல பாடமொன்றைக் கற்பிப்பார்கள்.- என்றார். (ஐ)

## பீரிஸின் மே தினக் கூட்டத்துக்கு சுதந்திரக் கட்சி போகமாட்டாது
### *அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு*

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நடத்தவுள்ள மேதினக் கூட்டத்துக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எவரும் செல்லமாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதம செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது ஊடகவியலாளர்களது கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுஜன பெரமுன ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஓர் அங்கமல்ல. அது பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் தனிக்கட்சி என்பதால் அந்தக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு நாங்கள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த வருடம் காலியில் நடத்திய மேதினக் கூட்டத்துக்கே பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர் என்பது வரலாற்றுச் சாதனை. இந்த முறை அந்தச் சாதனையையும் முறியடிப்போம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இந்த முறை மே தினக் கூட்டங்களில் மக்களின் செல்வாக்கு எந்தக் கட்சிக்கு உள்ளது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகவேண்டிய அவசியம் இருப்பதாக விமல் வீரவன்ஸ கூறியிருக்கிறார். அது அவரது சொந்த விருப்பம்.- என்றார். (ஐ)

## கண்காணிப்பு உறுப்பினர்களாக ஐ.தே.கவின் 40 பேர் நியமனம்

கொழும்பு, ஏப்.07

ஐக்கிய தேசியக் கட்சியின் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில், தனது நிதி அமைச்சை கண்காணிப்பதற்காகவே இந்தநியமனம் அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் வழங்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரவி கருணாநாயக்கவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நிதி அமைச்சின் கீழ் உள்ள 6 நிறுவனங்களைகண்காணிக்குமாறு ரவி கருணாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும்கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதன்போது வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக சஜின் வாஸ் குணவர்தன மற்றும் துமிந்த சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலவச தண்ணீர் விநியோக குழாயை பிடுங்கிய விஷமிகள்

யாழ்ப்பாணம், ஏப்.07

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மூலம் காரைநகர் பிட்டியெல்லையில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் தொட்டியின் குழாயை விஷமிகள் பிடுங்கி எறிந்தமையால் குடிதண்ணீர் பெற முடியாது பயனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலையைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சு காரைநகரில் பிட்டியெல்லை, ஊரி, பாலாவோடை போன்ற கிராமங்களில் இலவசமாகக் குடிதண்ணீரை விநியோகித்து வருகிறது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் ஏற்பாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது.

சுமார் ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட தாங்கிகளிலேயே குடிதண்ணீர்நிரப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில், பிட்டியெல்லையில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கத் தாங்கியில் கடந்த வாரம் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்த நிலையில் அதன் குழாய் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

இதனால் தண்ணீரும் வீணாகியுள்ளது என்று பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சருக்குத் தாம் முறையிடவுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)


கட்சி அரசியலுக்கு அப்பால் மக்கள் நலன்சார்ந்த நிகழ்வு
08.04.2017
சனிக்கிழமை காலை 9 மணி
இடம்:- தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகம்

பேரம் பேசும் சக்தியை நமது தலைவர்கள் இழந்து விட்டார்களா?
அல்லது பேரம் பேசும் தகுதி உள்ளவர்களை எமது மக்கள் தெரிவு செய்யத் தவறி விட்டார்களா?
அல்லது பேரம் பேசப் போனவர்கள் சோரம் போய் விட்டார்களா?

மக்கள் தங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தாங்கள் தான் போராட வேண்டும் என்றால் மக்கள் பிரதிநிதிகள் ஏதற்காக?



சிந்திக்க வேண்டாமா?
கொஞ்சம் மாத்தி யோசித்துப் பார்ப்போமா?
வாருங்கள் சிந்திப்போம்.

1077, கே.கே.எஸ், வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(R-010)

# முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள சர்ச்சைக்குரிய பாதுகாப்பு முகாம்களை அகற்ற பாதுகாப்பு அமைச்சு இணக்கம்



## அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.07

முஸ்லிம் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய பாதுகாப்பு முகாம்களை அகற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடனான கலந்துரையாடலிலேயே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கருமலையூற்று பள்ளிவாசலை அண்மித்துள்ள இராணுவ முகாம், தோப்பூர் 10 வீட்டுத்திட்டத்தை ஆக்கிரமித்துள்ள பாதுகாப்பு முகாம், மூதூர் பிரதேசத்திலுள்ள தக்வாநகர் கடற்படை முகாம் மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாலமுனை கடற்கரையோரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு முகாம் என்பவற்றை அகற்றி அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் மன்சூர் ஏ. காதிர், முப்படை அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கருமலையூற்று பள்ளி வாசல் காணிகள் இராணுவத்தால் சுவீகரிக்கப்படுகின்றன. அதனைத் தடுத்து நிறுத்துமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் காரசாரமான உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தார்.

இந்தநிலையிலேயே அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை அங்கிருந்து அகற்றுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

காணி சுவீகரிப்பு சட்டத்தின் 4ஆம்பிரிவின்கீழ்கருமலையூற்று பள்ளிவாசல் மற்றும் அதனை அண்டியுள்ள காணி என்பவற்றைச் சேர்த்து 4.65 ஹெக்ரேயர் பரப்பளவுடைய காணியை இராணுவத்தினர் தேவைக்காக சுவீகரிப்பதற்கான அறிவித்தல் பிரதேச செயலாளர் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# ஓட்டோவிலிருந்து கைக்குண்டு மீட்பு

திருகோணமலை, ஏப்.07

திருகோணமலை - கிண்ணியா - மஹ்ரூப் நகரில் ஓட்டோ ஒன்றில் இன்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 7.30மணியளவில் பொலிஸ் அவசர அழைப்புக்கு நபர் ஒருவர் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து கிண்ணியா பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்து விசாரணை செய்த பொலிஸார் பின்னர் அவர்களைப்பிணையில்செல்ல அனுமதித்துள்ளனர்.

மேலும் விசாரணைகளின்அடிப்படையில்கருத்துத்தெரிவித்தபொலிஸார், 'இரு குடும்பங்களின் பகைமை காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச்செயலை மேற்கொண்ட நபரை விரைவில் கைது செய்யும் முயற்சியை துரிதப்படுத்தியுள்ளோம்.- என்றனர்.

# கல்குடா மதுபான உற்பத்தி நிலையத்துக்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டும்!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை



கல்குடாவில் அமைக்கப் படும் மதுபான உற்பத்தி நிலையத்துக்கு முற்று முழுதாக தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 29 ஆம் திகதி வாழைச்சேனை ஓட்டமாவடிப் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார். அதற்கு முன்னர் இந்த உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று அகில இலங்கை ஜம் இய்யதுல் கல்குடா கிளை உலமாசபை கோரிக்கை விடுத்துள்ளது.

நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வரும்-கல்குடா கும்புறு மூலை வேம்புப் பகுதியில் அமைக்கப்படும் - மதுபான உற்பத்தி நிலையத்தை உடன் தடுத்து, மட்டக் களப்பை மது அற்ற மாவட்டமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்கக் கோரப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விடயத்தை அரசுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தும் நோக்கில் கல்குடா உலமாசபையால் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பொன்று ஓட்டமாவடி உலமாசபையின் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது கல்குடா உலமா சபையின் தலைவர் மௌலவி ஏ.எல்.எம்.இஸ்மாயில் தெரிவித்தவை வருமாறு:-

கல்குடா கும்புறுமூலைப் பகுதியில் பெரியதொரு மதுபான உற்பத்திநிலையம்அமைக்கப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சரவையிடம் முற்று முழுதாக மதுபான உற்பத்தி நிலையத்தை உடன் தடைசெய்ய வேண்டும் என்று உலமாசபை கேட்டுக் கொள்கின்றது.

இந்த மதுபான உற்பத்தி நிலையத்தை தடைசெய்யக் கோரி பல அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் பலர் பேசி தங்களின் கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆனால் இன்னும் பல அமைச்சர்கள், அரசியல்வாதிகள் என பலர் பேச வேண்டிய இடங்கள் இருக்கின்றன. அவர்களும் நூற்றுக்கு நூறு வீதம் பேசி அந்த மதுபான உற்பத்தி நிலையத்தை உடனடியாக நிறுத்துவதற்கு முன்வர வேண்டும் என உலமாசபை வேண்டுகின்றது.- என்றார். (எ)

# திருகோணமலை-கிண்ணியா இடையே இ.போ.ச. பஸ் சேவையை ஆரம்பிக்குக!

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. வேண்டுகோள்

திருகோணமலை நகரிலிருந்து கிண்ணியாவுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்றபோக்குவரத்து அமைச்சின்நாடாளுமன்ற விவாதத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை முன் வைத்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிண்ணியாப் பாலம் திறந்து வைக்கப்படும் வரையில்திருகோணமலை நகரிலிருந்து கிண்ணியாவுக்கு தனியான பஸ் சேவைஇருந்தது. ஆனால், அந்தப்பாலம்திறந்துவைக்கப்பட்ட பின்னர், அந்தச் சேவை நிறுத்தப்பட்டு, திருகோணமலை - மூதூர் என்ற சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால், மூதூரிலிருந்து வரும் பஸ்ஸிலேயே கிண்ணியாவைச் சேர்ந்தவர்கள் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

தற்போது கல்முனை -யாழ்ப்பாணத்துக்குஇடையிலான சேவையில் ஈடுபடும் பஸ்கள் பொலன்னறுவை, ஹபரணை, அநுராதபுரம் ஊடாகப் பயணிக்கின்றன. அவற்றில் சில பஸ்களை வாகரை -திருகோணமலை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு பயணிக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதன்மூலம் வாகரை, வெருகல், சேருவில ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்கள் யாழ்ப் பாணம் மற்றும் வவுனியாவுக்குப்பயணிப்பதில் எதிர்நோக்கும் சிரமத்தைக் குறைக்க முடியும். மேலும், கிண்ணியா, மூதூர், கந்தளாய் ஆகிய பஸ் டிப்போக்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.-என்றார். (எ)

# இலங்கைக்கு எவரும் உத்தரவுகள் வழங்குவதில்லை

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு

நாட்டில் தற்போது ஜெனீவா பற்றி அதிகம் பேசி வந்தாலும், அவை ஜெனீவாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உத்தரவுகள் அல்ல, பரிந்துரைகள் மாத்திரமே என்று தேசிய கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.. இலங்கைக்கு எவரும் உத்தரவுகளை வழங்குவதில்லை என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு என்ற வகையில் எமக்கு ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் ஆகியோர் இருக்கின்றனர். நாங்கள்பரிந்துரைகள்தொடர்பில் கலந்துரையாடி முடிந்த வகையில் அவற்றை நிறைவேற்றுவோம். இதற்காக யாரும் குழப்பமடையத்தேவையில்லை. அத்துடன் சர்வதேச தொடர்புகள் நாட்டுக்குத் தேவையில்லை என்று எவரும் கூற முடியாது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜெனீவா கூட்டத் தொடர் முடிவடைந்தது. அதில் சரத் வீரசேகர என்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டிருந்தார் அவர் எப்படிச் சென்றார்? அவர் மஹிந்த ராஜபக்ஷ அணியின் பிரதிநிதியாக அங்கு சென்றார். அங்கு சென்று என்ன செய்தார்?

பல்வேறு விடயங்களைப் பேசி விட்டு, ஆராய்ந்து பார்க்க இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் அதிகாரி ஒருவரை அனுப்புமாறு கோரிக்கை விடுத்தார்.

வீரசேகர இங்கு வந்து என்ன செய்தார்?

புலிகள் அமைப்பின் குற்றங்களைத் தேடுமாறு கூறினார். அது பிரச்சினையில்லை, புலிகளின் குற்றங்களையும் தேட வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் இலங்கைக்கு எதிராக மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் பல குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றையும் நாங்கள் தேடி அறிவோம். அவற்றை வெறுமனே கைவிட்டு விட மாட்டோம்.-என்றார். (எ)

# தீப்பற்றிய கப்பலில் ஆபத்தான பொருள்கள்!



கொழும்பு, ஏப். 07

கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் பாரிய கொள்கலன் கப்பலில் ஏற்பட்டிருந்த தீ நேற்று முன்தினம் அணைக்கப்பட்டுவிட்டது என்று இலங்கை, இந்திய கடற்படைகள் தெரிவித்துள்ளன.

பனாமாநாட்டுக் கொடியுடன் கொழும்பில் இருந்து 120 கடல் மைல் தொலைவில் சென்று கொண்டிருந்த எம்.வி. டானியேலா என்ற கொள்கலன் கப்பலில் கடந்த புதன்கிழமை தீவிபத்து ஏற்பட்டது.

சிங்கப்பூரில் இருந்து 14 ஆயிரம் கொள்கலன்களுடன், இந்தக் கப்பல் சூயெஸ் நோக்கி சென்று கொண்டிருந்த போது, கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.55 மணியளவில் தீப்பிடித்தது.

இதையடுத்து, உள்ளூர் முகவரால் இலங்கைக் கடற்படையிடம் உதவி கோரப்பட்டது.

உடனடியாக இலங்கைக் கடற்படையின் இரண்டு அதிவேகத் தாக்குதல் படகுகளும், இரண்டு இழுவைப் படகுகளும் விரைந்து சென்று கப்பலில் இருந்த 21 மாலுமிகளை மீட்டமையுடன், கப்பலில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியிலும் ஈடுபட்டன.

எனினும், தீபெருமெடுப்பில் பரவிக் கொண்டிருந்ததால், இலங்கைக் கடற்படையினரால் இந்தியாவிடமும் உதவி கோரப்பட்டது.

அதேவேளை, கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 11 கடல் மைலுக்கு அப்பால் வரை இழுத்து வரப்பட்டது.

இலங்கைக் கடற்படையின் சாகர என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலுடன், இந்திய கடலோரக் காவல்படையின் சூர் என்ற கப்பலும், இந்தியக் கடற்படையின் காரியல் மற்றும் தர்ஷக் ஆகிய கப்பல்களும் விரைந்து சென்று தீயணைப்பில் ஈடுபட்டன.

இவற்றுக்கு மேலதிகமாக இலங்கைக் கடற்படையின் மேலும் 3 அதிவேக தாக்குதல் படகுகளும், விமானப்படையின் பெல் உலங்குவானூர்தி ஒன்றும் தீயணைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்தக் கூட்டு முயற்சியின் விளைவாக, நேற்று முன்தினம் பிற்பகல் கப்பலில் பரவிய தீ அணைக்கப்பட்டது. எனினும், கப்பலில் இருந்து புகை வந்து கொண்டிருப்பதால் தொடர்ந்தும் கடற்படைக் கப்பல்களில் இருந்து நீர் பாய்ச்சப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள இந்திய அதிகாரிகள், தீப்பிடித்த கப்பலில் ஆபத்தான பொருள்கள் இருப்பதாகவும் அதனால், கப்பல் மற்றும் மாலுமிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு தீயணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிவித்துள்ளனர்.

தற்போது கொழும்பு துறைமுகத்தில் இருந்து 11 கடல் மைல் தொலைவில் எம்வி. டானியேலா என்ற கப்பல் தரித்துள்ளது.

கப்பலின் இடது பக்கத்தில் எரிந்து கொண்டிருந்த தீ நேற்று முன்தினம் காலை அணைக்கப்பட்டது.

எனினும், வலப்பறத்தில் தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், புகை வந்து கொண்டிருப்பதால், இந்திய, இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் நீரைப் பாய்ச்சி வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சட்டவிரோத வெளிநாட்டுப் பயணம்; 6 ஆயிரத்து 176 பேர் கைது!

*அமைச்சர் சாகல ரட்ணாயக்க தெரிவிப்பு*



கொழும்பு, ஏப். 07

சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல எத்தனித்த 6 ஆயிரத்து 176 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என சட்டம், ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்ணாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசு தேவநாணயக்கார சபையில் நேற்று முன்தினம் முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த சட்டவிரோத பயணங்களை ஏற்பாடு செய்த, அவற்றிற்கு வசதியளித்த 602 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களில் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முனைந்த 20 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டனர்.

இவர்கள் 50 ஆயிரம் முதல் இரண்டு லட்சம் ரூபாவுக்கு இடைப்பட்ட ரொக்கப் பிணையையும், ஐந்து லட்சம் முதல் 15 லட்சம் ரூபா வரையிலான சரீரப் பிணையையும் செலுத்த நேரிடும்.

இத்தகைய விவகாரம் தொடர்பில் 246 விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன. 74 விசாரணைகள் தொடர்பில் வழக்குத் தொடுக்கப்பட்டது. மேலும், 172 விசாரணைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை நாடப்பட்டுள்ளது.- என்றும் தெரிவித்துள்ளார்.

## காணாமற் போனோர் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறையில் விசாரணை

*அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 07

காணாமற் போனோர் தொடர்பான சட்ட நடைமுறைகளை மதித்து, உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக விசாரணை நடத்தப்படும் என்று சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்தவை வருமாறு:-



வெளிநாட்டு நீதிபதிகளை இணைத்துக் கொண்டு விசாரணை நடத்த அரசமைப்பில் இடமில்லை. இதனை ஜனாதிபதியும், பிரதமரும் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் யோசனைகளை அமுலாக்க அரசாங்கத்திற்கு இரு வருட கால அவகாசம் கிடைத்துள்ளது. இதன் பிரகாரம் 2019ஆம் ஆண்டில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன், இவ்வாண்டுக்குள் பண வீக்கத்தையும், வாழ்க்கைச் செலவையும் கட்டுப்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

சமகாலத்தில் பணவீக்கமும், வாழ்க்கைச் செலவும் ஓரளவு அதிகரித்துள்ளமை உண்மையே. இருந்தபோதிலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக இவ்வாண்டுக்குள் அவை குறையும்.

மேமாதத்திற்குள் மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்கும். அரசாங்கம் முதலீடுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் காரணமாக நாட்டில் கணிசமான பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.- என்றும் தெரிவித்தார்.

## தேசிய ஏற்றுமதி மூலோபாய அபிவிருத்தி மாநாடு!

கொழும்பு, ஏப். 07

தேசிய ஏற்றுமதி மூலோபாய அபிவிருத்தி மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பமாகியுள்ளது.

இந்த மாநாடு பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் இன்று ஆரம்பமாகி இடம் பெறும்.

இதில் 150 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர் என்று சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் பௌசிக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, ஏப். 07

சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு நெதர்லாந்து அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு கோடி ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றை தனது சொந்த தேவைக்காக அமைச்சர் பௌசி பயன்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.



இதன் போது நான்கு குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பத்திரிகையொன்று தாக்கல் செய்யப்பட்டது. லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவினால் அமைச்சர் பௌசிக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப் பத்திரிகை சட்டத்திற்கு முரணான வகையில் அமைந்துள்ளதாக அமைச்சரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார். இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# 'சைட்டம்': இறுதித் தீர்மானம் ஏப்.10 இல் என்கிறார் ராஜித



கொழும்பு, ஏப்.07

மாலபே 'சைட்டம்' மருத்துவக் கல்லூரியின் தரம் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை இலங்கை வைத்திய சபைதான் வழங்க வேண்டும். இது தொடர்பிலான தீர்மானத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி வழங்குவதாக இலங்கை மருத்துவ சபை தன்னிடம் அறிவித்துள்ளது என்று சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்தச்சபை இதுதொடர்பில் ஆராய்வதற்காக இன்று வெள்ளிக்கிழமை விசேட கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் 'சைட்டம்' தொடர்பிலான தீர்மானத்தை என்னிடம் கேட்க வேண்டியதில்லை. இலங்கை மருத்துவ சபையிடமே அதனைக் கேட்க வேண்டும்.-என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 07.04.2017

துர்முகி வருஷம் 2017 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 25ஆம் நாள் ஏகாதசித்திதி. காலை 8.55 மணி வரை. பின் னர் துவாதசி. நட்சத்திரம்: மகம் இரவு 11.34 மணி வரை. பின்னர் பூரம். மரணயோகம் இரவு 11.34 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 10.40 மணி முதல் 12.12 மணி வரை. சுபநேரம்: காலை 6.01 மணி முதல் 7.31 மணி வரை. இன்று ஏகாதசி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: பங்குனி மாத வளர்பிறை துவாதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: மகம்.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். செய்யும் தொழிலில் லாபம் கிடைக்கும். புதிய வீடு, வாகன வசதி உண்டாகும் வழக்குகள் சாதகமாகும்.

**ரிஷபம்:** கவலையான நாள். பணவரவு குறையும். திட்டமிட்ட பணிகளில் தாமதம் உண்டாகும். தொழிலில் முதலீடு செய்வதில் மந்த நிலை உண்டாகும்.

**மிதுனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். சிலர் தொழில் வகையில் குடும்பத்தை விட்டுப் பிரியவும் நேரும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**கடகம்:** யோகமான நாள். கல்விக்கு இருந்து வந்த தடைகள் விலகும். வெளியூரில் தொழில், முதலீடு செய்தல், வெளிநாட்டுப் பயணம் போன்றவை அனுகூலமாகும்.

**சிம்மம்:** மகிழ்ச்சியான நாள். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். தொழிலில் முதலீடு பெருகும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**கன்னி:** சலனம் மிகுந்த நாள். மனதில் சிந்தனை, கவலை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் கவனக் குறைவு ஏற்படும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். பெண்கள் சிலருக்கு தடைப்பட்ட திருமணம் நிகழும்.

**விருச்சிகம்:** விருத்தியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். புதிய வீடு, வாகன வசதிகள் கிடைக்கும். தனலாபம் பெறும் யோகம் உண்டாகும்.

**தனுசு:** இன்பமான நாள். தனவரவு அதிகரிக்கும். பெண்களுக்குத் திருமணம் கைகூடும். உத்தியோகம் செய்யும் பெண்கள் பதவி உயர்வைப் பெறுவார்கள்.

**மகரம்:** கவலையான நாள். குடும்பத்தில் நிம்மதி குறையும். தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். மனதில் வெறுப்பும், விரக்தியும் உண்டாகும்.

**கும்பம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. உறவினர் வீட்டுச் சுபகாரியங்களில் கலந்து கொள்வதும், சுபச் செலவுகளும் உண்டாகும்.

**மீனம்:** நன்மையான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். சகோதர உறவு வலுவடையும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும்.

சந்திராட்டமநாள்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2 ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இந்த நாளில் நற்கருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

# வில்பத்துக்கு தீர்வு: சகல காடுகளையும் இணைப்பதுதான்!

## தேசிய ஒன்றிணைந்த குழு தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 07

வனப்பிரதேசத்துக்கென ஒதுக்கப்பட்ட காணிகள் அனைத்தையும் வில்பத்து வனத்துடன் இணைத்துக் கொள்வதே வில்பத்து பிரச்சினைக்கு நிலையான தீர்வு என்று தேசிய ஒன்றிணைந்த குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய ஒன்றிணைந்த குழுவின் ஊடகவியலாளர்சந்திப்பிலேயே சூழலியலாளர் தினெத் மல்லிகாராய்ச்சி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது ஜனாதிபதி யால் கையொப்பமிடப்பட்டுள்ள வர்த்தமானியின் மூலம் 2012 ஆம் ஆண்டுபிரகடனப்படுத்தப்பட்ட காணிகளின் பாதுகாப்பு மட்டுமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வனப்பிரதேசத்துக்கென ஒதுக்கப்பட்ட அனைத்துக் காணிகளையும் வில்பத்து தேசிய வனத்துடன் இணைத்து வன விலங்குகள்பாதுகாப்புத்திணைக் களத்துக்கு மாற்றுவதே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

இதேவேளை, அந்தக் காணிகளை எவ்வாறு பயன் படுத்துவது என்பது தொடர்பில் அந்தப் பகுதியில் குடியேறியுள்ள மக்களுக்கு அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். -என்றார். (எ)

# சமுத்திர மீட்பு மத்திய நிலையத்தை கொழும்பில் அமைக்க அரசு முடிவு

கொழும்பு, ஏப். 07

சமுத்திரத்துடன்தொடர்பான மீட்பு ஒருங்கிணைப்பு பிரதான மத்திய நிலையத்தை நவீன வசதிகளுடன் கொழும்பில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

சமுத்திரத்துடன் தொடர்பான மீட்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கை கையொப்பமிட்டுள்ள சர்வதேச ஒப்புதல்களின் அடிப்படையில் இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்பிடி மற்றும் கப்பல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வேளையில் விபத் துக்குள்ளாகும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு விபத்துக்குள்ளாகும் கப்பல்களைத் தேடுதல், மற்றும் மீட்புச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக சமுத்திரத்துடன் தொடர்பான மீட்பு ஒருங்கிணைப்பு மத்திய நிலையத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது.

அதனடிப்படையில், பல நவீன வசதிகளுடன் கூடிய சமுத்திரத்துடன் தொடர்பான மீட்பு ஒருங்கிணைப்பு பிரதான மத்திய நிலையத்தை கொழும்பில் நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், உயிர்க்காப்பு மத்திய நிலையம் ஒன்றை அம்பாந்தோட்டையில் நிறுவுவதற்கும், அதற்கு மேலதிகமாக காலி, திருகோண மலை, பருத்தித்துறை, மொல்லிகுளம், அறுகம்பே, மட்டக்களப்பு மற்றும் கல் அராவ ஆகிய பிரதேசங்களில் உப மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தவேலைத் திட்டங்களை இவ் வருடம் ஆரம்பித்து 4 வருடங்களில் பூரணப்படுத்துவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப் படையில், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவால் முன்வைக் கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# கட்டார் விடுத்த இலங்கைக்கான பயண எச்சரிக்கை பிழையானது

## சுகாதார அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

*இலங்கைக்குப் பயணம் செய்வது தொடர்பில் கட்டார் அரசால் விடுக்கப்பட்டுள்ள பயண எச்சரிக்கை பிழையானது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.*

*சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கும் அளவுக்கு இலங்கையில் எச்1என்1 நோய்த் தொற்று பரவவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அசேல வீரக்கோனுக்கு, இந்த நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.*

*இதுதொடர்பில் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-*

*2005 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சுகாதார நியமங்களுக்கு அமைய உறுப்பு நாடு ஒன்று மற்றுமொரு நாட்டின் மீது இவ்வாறு பயணத் தடை விதிக்க முடியாது.*

*2009 ஆம் ஆண்டின் பின்னர் உலகின் பல நாடுகளிலும் நிலவிய நிலைமையே இலங்கையிலும் ஏற்பட்டுள்ளது. பருவப் பெயர்ச்சி மழையுடன் இவ்வாறு நோய்த் தொற்று பரவுவது சாதாரண ஒரு நிலைமை.*

*கண்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மொனராகலை ஆகிய பகுதிகளில் அதிகளவில் இந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.*

*கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னைய நிலையுடன் ஒப்பீடு செய்யும்போது தற்போது எச்1என்1 நோய்த் தாக்கம் குறைவடைந்துள்ளது.*

*2009 ஆம் ஆண்டில் கடுமையாக இந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டிருந்தபோது கூட உலகின் எந்தவொரு நாடும் பயணத்தடை விதிக்கவில்லை.-என்றுள்ளது.* (எ)

# உள ஆரோக்கியமும் சுகாதாரம்தான்...!

உலக சுகாதார தினத்தில் குறிப்பிட்டுச் சொல்லப் படுவது முதுமையும் ஆரோக்கியமும் ஆகும். மூத்த குடி மக்கள் வாழ்நாள் முழுவதும் உடல் நலத்தோடு இருக்க அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுப்பது, அரச மருத்துவ மனைகளில் முது மக்களுக்கு ஏற்படும் உடல், மனம் சார்ந்த கோளாறுகளைப் போக்க தனிப் பிரிவு ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாப்பது போன்ற திட்டங்களை அமுலாக்குதல் இவை எல்லாம் உலக சுகாதார தினத்தில் செயற்படுத்தப்படுகிறது.

உடலை நலமாக வைத்துக் கொள்ள உடற்பயிற்சி, மனதை நலமாக வைத்துக் கொள்ள, மனதை ஒருநிலைப்படுத்த தெய்வ வழிபாடு, தியானம் சொல்லப் படுகிறது. இவற்றைக் கடைப்பிடித்தால் மறதி நோயிலிருந்து விடுபடலாம்.

முதுமையில் உள்ளவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது நல்லது என்ற செய்திகள் இந்தத் தினத்தில் வலியுறுத்தப்படுகிறது.

சுத்தம் சோறு போடும் என்பார்கள். கூழானாலும், குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பார்கள். நம்மை - நாம் வாழும் வீட்டை - சுற்றுப் புறத்தை சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும். குப்பைகளை மூடிவைத்து குப்பைக்காரர் வரும் போது அந்த வண்டியில் போட வேண்டும். நம் வீடு சுத்தமாய் இருக்க வேண்டும் என்பதற்காக எல்லா நேரமும் குப்பைகளைத் தெருவில் கொட்டக் கூடாது. அது காற்றில் பறந்து சுற்றுப் புறத்தை மாசுபடுத்தும்.

இந்த வெயில் காலத்தில் பல்வேறு நோய்கள் வரும். அந்தக் காலத்தில் உள்ள பெரியவர்கள் அம்மை நோய் வந்த வீட்டில் உள்ள குப்பைகளை வெளியே கொட்டமாட்டார்கள். அந்தக் குப்பைகளைச் சேர்த்து வைத்திருப்பார்கள். தலைக்குத் தண்ணீர் விட்டபின் தான் அதை, புதைப்பார்கள் அல்லது எரிப்பார்கள். ஏனென்றால் அம்மை புண் ஆறும்போது அதன் மேல் பாகம் உதிரும். அதை வெளியில் போட்டால் அதன் மூலம் நோய் பரவும் அதைத் தடுக்கத்தான் சாஸ்திரம் மாதிரி, அம்மை போட்ட வீட்டில் குப்பையை வெளியில் கொட்டக் கூடாது என்றனர்.

நோய் கண்டவர்களைப் பார்க்கப் போகும் ஆண்கள், வீட்டில் உள்ள ஆண்கள் சவரம் செய்து கொள்ளக் கூடாது என்பர். அதற்கு காரணம் சவரம் செய்து கொள்ளும்போது ஏதாவது காயங்கள் ஏற்பட்டு இருந்தால் அதன் வழியாக நோய் பரவி விடும் என்று சொல்வார்கள்.

குடிதண்ணீர் சுத்தமாய் இருக்க வேண்டும், மூடி இருக்க வேண்டும். தண்ணீரைச் சுட வைத்துக் குடிக்க வேண்டும். இதையே முன்னோர்கள், நீரைச் சுருக்கிக் குடிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

உணவுப் பொருள்களை மூடி வைத்து உண்ண வேண்டும். அதற்கு பெரியவர்கள், கரண்டி சாதபாத்திரத்தில் இருந்தால் செக்கார் வீட்டுக்கு செல்வம் போய்விடும் என்று அச்சுறுத்தி கரண்டியை வெளியே எடுத்து நன்கு மூட வைத்தார்கள்.

சிறு குழந்தைகளுக்கும், திறந்து இருக்கும் உணவுப் பொருள்களை வாங்கி உண்ணக் கூடாது என்று சொல்லி வளர்க்கலாம். வெயில் காலத்துக்கு ஏற்ற உணவை உண்ண பழக்க வேண்டும். இளநீர், நுங்கு, மோர், எலுமிச்சை யூஸ், தர்பூசணி, மற்றும் பழங்கள் சாப்பிடும் பழக்கத்தை குழந்தைகளுக்கு பழக்கப்படுத்த வேண்டும். குளிர்பானங்கள், ஐஸ்கிறீம், போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

சுற்றுப் புறங்களில் நுளம்பு பெருகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நுளம்புப் பெருக்கத்தால் டெங்கு போன்ற உயிர் கொல்லும் அபாயகரமான நோய்கள் ஏற்படும்.

நோய் வராமல் இருக்க, மனச்சுத்தமும் தேவை. ஆசை, சினம், கவலை, எல்லாவற்றையும் சீர் செய்தால் நோய் வராமல் தவிர்க்கலாம்.

கை அளவு உள்ளம் வைத்து கடல் போல ஆசை வைத்து என்று கவிஞர் சொன்னது போல்ஒவ்வொருவருக்கும் ஆசைகள் அளவிட முடியாத அளவில் இருக்கின்றன. ஆசை நிறைவேறாத போது அல்லது தடை ஏற்படும் போது கோபம் ஏற்படுகிறது. ஆசையை முறைப்படுத்தி விட்டால் நலமாய், வளமாய் வாழலாம். போதுமென்ற மனம் இருந்தால் வாழ்வில் நிறைவு வரும். அமைதியாய் ஆனந்தமாய் வாழலாம்.

சினம் நம்மையும் பாழ்படுத்தி, நம்மை சேர்ந்தவர்களையும் பாழ்படுத்திவிடும். குடும்பம், அக்கம் பக்கம், நண்பர்கள், நாம் வேலை செய்யும் இடம், உற்றார், உறவினர் என்று கோபத்தில் நம்உடலும் கெடுகிறது. அல்சர், இரத்தக் கொதிப்பு போன்ற நோய்கள் வரும். கோபத்தால், படபடப்பு, வார்த்தைகள் தடித்து என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசி விட்டு பின் வருத்தப்பட்டு பலன் இல்லை. வள்ளுவர், சினத்துக்கு முதலில் நா காக்க வேண்டும் என்கிறார்.

இனிமையும் மகிழ்ச்சியும், வேண்டும் என்றால் - அதுவும் முதுமையில் எல்லோர் நட்பும், உதவியும் வேண்டும் என்றால் - சினம் தவிர்க்க வேண்டும்.

கவலையும் ஒரு நோய் தான். கவலைக்கு கவலை கொடுக்க வேண்டும். இவனை, இவளைக் கவலைப்பட செய்ய முடியவில்லையே என்ற கவலை நம்மை பார்த்து ஓட வேண்டும். அப்போது நம்மிடமிருந்த நோய் ஓடிவிடும். வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பார்கள். கவலையைப் போக்க வழி - வேண்டாத சிந்தனை, எல்லோரிடமும் ஏதாவது எதிர்ப்பார்ப்பு ஆகியவற்றை விட்டுவிடுவது, எதிர்பார்ப்பு ஏமாற்றமாய் முடிந்தால் கவலை. அப்படி ஆகி விடுமோ, இப்படி ஆகி விடுவோம் என்ற அச்சத்தால் கவலை உருவாகிறது. கவலைப்படாமல் இருந்தால் நலமாக வாழலாம்.

**இன்று உலக சுகாதார தினம். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



முதியோர்கள் எல்லோரிடமும் நல்ல உறவு வைத்துக் கொண்டால், ஒவ்வொருவருக்கும் ஏற்ற முறையில் பேசிப் பழகினால் நல்லது. உதாரணமாகக் குழந்தைகளிடம் குழந்தைகள் மாதிரி பேசுவது, இளவயதுக்காரர்களிடம் அவர்களுக்கு பிடித்த விஷயங்களைப் பேசுவது நல்லது.

சிறியவர்களிடம் பெரியவர்களும் உலக விஷயங்களை அறிந்து கொள்ளலாம். சிறியவர்களும் அதனால் மகிழ்வார்கள்.

முதியவர்கள் பொருளாதாரத்தில் தன்நிறைவு பெற்று இருந்தால் எந்த கவலையும் இல்லாமல் சந்தோஷமாய் இருக்கலாம். அதற்கு முதுமைக்கு வேண்டிய பொருளை இளமையில் சேமித்து வைத்து இருக்க வேண்டும். பிறர் கையை எதிர்பார்த்து இருப்பதே முதுமையில் நோயாகிவிடும்.

இப்போது எல்லா முதியவர்களும் தனியாகத் தான் வாழவேண்டி உள்ளது. அது காலத்தின் கட்டாயம் ஆகி விட்டது. பிள்ளைகள் வெளி நாட்டில் பெற்றோர் இங்கு என்று இருக்கும் போது அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் பெற வேண்டும். நாம் தன்னம்பிக்கையுடன் வாழ்வை நடத்திச் சென்றால் அவர்கள் அங்கு நலமாய் வேலை செய்வார்கள்.

முதியவர்களை ஒதுக்கி வைக்காமல் அவர்கள் ஏதாவது உதவி செய்ய முன் வந்தால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது அவர்களுக்கு தெம்பை கொடுக்கும். தினம் சிறிது நேரம் அவர்களுடன் பேசுவது நல்லது. சாப்பிட்டீர்களா என்று கேட்பது, அவர்களுடன் உணவு அருந்துவது, மருந்து மாத்திரைகள் சாப்பிடுபவர்களாய் இருந்தால் அதை நேரத்துக்குச் சாப்பிட்டார்களா என்று கேட்பது நல்லது. அப்போது நம் மேல் எல்லோரும் பாசமாய், அன்பாய் இருக்கிறார்கள் என்பதே அவர்களை மேலும் உற்சாகப்படுத்தும்.

ஏதோ முதுமை காரணமாக, அல்லது நோயின் தாக்கத்தால் கோபமாய் வார்த்தைகளை பேசினால் அவை கேட்காதது போல் நடந்து கொள்ள வேண்டும். குழந்தை போல் பிடிவாதம் பிடிக்கும் முதியவர்களை ஏதாவது நோயைச் சொல்லி தன்னை எப்போதும் கவனிக்க வேண்டும் என்று நினைக்கும் முதியவர்களுக்கு எதைப் பற்றியும் யோசிக்க இடம் கொடுக்காமல் அவர்களை வேறு பொழுது போக்குகளில் ஈடுபடச் செய்து அவர்கள் சுறுசுறுப்பாய் இயங்க வைத்தால் நலமாக இருப்பார்கள்.

உலக சுகாதார தினத்தில் தாய் சேய் நலமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

குழந்தைகளை அன்பாய் நல்ல மனவளம், உடல் நலம் மிக்கவர்களாக வளர்த்தால் அவர்கள் பெற்றோர்களை நன்கு மதித்து சமூகத்தில் பிறர் போற்றும் மக்களாய் வாழ்வார்கள். தாய் கருவுற்று இருக்கும் போது ஊட்டம் மிகுந்த உணவுகள் சாப்பிட்டு, நல்ல சிந்தனையுடன், மகிழ்ச்சியுடன் இருந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டால் அந்த குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல குழந்தைகளாய் வளர்வார்கள். ஆரோக்கியமான சூழலில் வளரும் குழந்தைகள் மன உறுதியும், திறமையும் உடையவர்களாய் வளர்வார்கள்.



1950 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் 7 ஆம் திகதி உலக சுகாதார தினம் கொண்டாடப்படுகிறது. இயற்கை முறை வேளாண்மை, சுத்தமாக சமைப்பது, முழுமையாக சமைப்பது, உணவு கெட்டுப் போகாமல் சரியான வெப்ப நிலையில் பாதுகாப்பது, சுத்தமான நீரை பயன்படுத்துவதே இதன் நோக்கம். நமது உடலின் பெரிய உறுப்பான தோல் தான் பல்வேறு நுண்கிருமிகளின் வளர்ச்சிக்கும், நோய் தொற்றுக்கும் காரணமாகிறது. நமது தோலில் ஒரு சதுரசென்ரிமீற்றரில் இயற்கையாகவே 3 ஆயிரத்து 200 நுண்கிருமிகள் வாழ்கின்றன. தோலில் அமிலத் தன்மை உள்ளதால் பக்றீறியா, பூஞ்சை, ஈஸ்ட், வைரஸ் கிருமிகள் எளிதில் வளர்கின்றன. எனவே தினமும் குளிப்பதும், கை, கால்களை சோப்புப் போட்டு சுத்தம் செய்வதும் அவசியம். சாதாரண நிலையிலேயே விரல் இடுக்குகளில் 14 வகையான பூஞ்சி கிருமிகள், தொப்புளில் வீரியம்மிக்க 4 வகை பாக்றீறியாக்கள், பல்துலக்கும் பிரஷில் 100 இற்கும் மேற்பட்ட பாக்றீறியாக்கள் உள்ளன. விரலில் உள்ள நுண்கிருமிகள் உணவு பரிமாறுதல் மற்றும் கைகுலுக்குவதன் மூலம் மற்றவர்களுக்கு நோய் பரவுகிறது.

தலைசீவும் சீப்பில் 3 ஆயிரத்து 400, கழிப்பறை தொட்டியில் 2 ஆயிரத்து 700, சாப்பிட்டு கழுவாத தட்டில் 2 ஆயிரத்து 100, பாத்திரம் கழுவும் தொட்டியில் 12 ஆயிரம், காலணியின் வெளிப்புறம் 4 லட்சத்து 20 ஆயிரம், உட்புறம் 2 ஆயிரத்து 500 கிருமிகள் உள்ளன. இவை மருந்துக்குக் கட்டுப்படாத கிருமிகள் என்று சொல்லப்படுகின்றன.

வீட்டுக்குள் வெளிச்சமின்றி அமைந்துள்ள கழிப்பறைகள், மலம் கழித்தபின் சோப்புப் போட்டு கையை கழுவாத நிலையில் மலக்கழிவுகளின் மூலம் மஞ்சள் காமாலை மற்றும் புழுத்தொற்று ஏற்படுகின்றன. காய்கறி, உணவுக் கழிவுகளை 12 மணி நேரத்துக்கு மேல் வீட்டில் வைத்தால் அதிலிருந்து பாக்றீறியா பரவி, வயிறு சார்ந்த உபாதைகள் வரும். சமைத்த உணவுகளை இரண்டு மணி நேரத்துக்குள் சாப்பிட வேண்டும். அதற்கு மேல் எனில், பிரிட்ஜில் வைத்து பாதுகாக்கலாம். மீண்டும் வெளியில் எடுத்து அரைமணிநேரம் கழித்து முழுமையாக சூடுபடுத்தி சாப்பிட வேண்டும். கெட்டுப்போன உணவு, பழைய இறைச்சி மற்றும் அழுகிய பழங்களை பிரிட்ஜில் ஒன்றாக வைத்தால் நல்ல உணவுகளிலும் கிருமிகள் வளரும்.

கெட்டுப் போன உணவை சாப்பிட்ட ஒன்று முதல் ஆறு மணி நேரத்துக்குள் வயிற்றுவலி, வாந்தி, காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது. சிலநேரங்களில் மூன்று நாள்கள் கழித்து கூட இப்பிரச்சினை ஏற்படலாம். சுகாதாரமற்ற கைகளால் உணவு சமைத்து பரிமாறுவதால், சாப்பிடுபவர்களின் வயிற்றில் தட்டை மற்றும் உருண்டைப் புழுக்கள் உண்டாகின்றன.

தெருவோர திறந்த நிலையில் விற்கப்படும் உணவுப்பண்டங்களால் கொலரா, டைபாய்டு, வயிற்றுப் போக்கு ஏற்படுகின்றன.

நமது உடல், உண்ணும் உணவு மற்றும் சுற்றுப்புறம் சுத்தமாக இருந்தால் தான் நிலம், நீர், காற்று மாசடையாமல் ஆரோக்கியமான வாழ்க்கையைப் பெறமுடியும். இதைத் தான் நம் முன்னோர்கள் சுத்தம் சோறு போடும் என்றனர். உண்ணும் உணவில் சுகாதாரத்தைப் பின்பற்றினால் ஆரோக்கியத்துக்கு நூறு மதிப்பெண் கிடைக்கும்.

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 142


பொன்.வேணு கிருஷ்ணா

மத்திய கிழக்கை மட்டுமே கவனத்தில் வைத்துக்கொள்வது போதாது என்றும், ஒட்டுமொத்த ஆசியக் கண்டத்தில் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதை அமெரிக்கா விளங்கிக் கொண்டது. அதிலும் அமெரிக்காவுக்குப் பெரிய போட்டியாளர்களாக உருவாகியிருக்கும் ரஷ்யாவையும் சீனாவையும் சுற்றிவளைப்பதும் அவர்களை மேலும் வளரவிடாமல் தடுப்பதும் அவசியம் என்றும் தீர்மானித்தது அமெரிக்கா. ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில், ஈராக்கிலிருந்தும் ஆப்கானிஸ் தானிலிருந்தும் தனது படைகளை திரும்பப் பெற்றுக்கொண்டது அமெரிக்கா. சீனாவுக்கு அருகில் தனது படைகளை தென்கொரியாவில் அதிகரித்ததும், கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிக் கொண்டிருந்த தென்-வட கொரிய நாடுகளுக்கிடையில் சண்டையினை அதிகரித்ததும், அதனைத் தொடர்ந்து தென்கொரியாவில் அமெரிக்கப் படைகளை அதிகரித்ததும் சீனாவைக் குறிவைத்தே நடத்தப்பட்டன. ரஷ்யாவைக் குறிவைப்பதற்காக நேட்டோவை ஐரோப்பா நாடுகள் பலவற்றிலும் விரிவாக்கம் செய்துகொண்டே ரஷ்யாவின் எல்லைவரை கொண்டுசென்றது அமெரிக்கா. ரஷ்யாவின் மற்றொரு எல்லையில் இருக்கும் ஜோர்ஜியாவுக்கு நேட்டோவைப் பரவச்செய்து அங்கேயும் நேட்டோவின் ஏவுகணைத் தளத்தை அமைத்தது அமெரிக்கா. அதனால் நிகழ்ந்த முரண்பாடுகளினால், ரஷ்ய-ஜோர்ஜியா எல்லையில் இருக்கும் இரண்டு பகுதிகளில் தனிநாடு கோரிய அந்த மக்களின் கோரிக்கைகளை ரஷ்யா அங்கீகரித்தது. அப்காசியா மற்றும் தெற்கு ஒஸ்சசேசியா ஆகிய நாடுகளை இன்றுவரை ஜோர்ஜியாவோ அமெரிக்காவோ அங்கீகரிக்கவில்லை.

2008இல் தொடங்கிய வங்கித்துறை நெருக்கடிகளினால், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. அதன் விளைவாக, ரஷ்யா உள்ளிட்ட எண்ணை தயாரிக்கும் பிற நாடுகளும் பாதிப்புக்குள்ளாயின. அந்தக் காலகட்டத்தில் யூரோ-ஆசியப் பொருளாதாரத்தை பாதுகாப்பதற்கான ஏராளமான ஆலோசனைகளை நடத்திவந்தது ரஷ்யா. அமெரிக்கா ஆட்டங்கண்டால், யூரோ-ஆசியக் கண்டத்து நாடுகளும் பாதிக்கப்படும் நிலை தொடர்ந்துகொண்டிருப்பதை தடுத்துநிறுத்தும் நோக்கிலேயே இப்படியான யூரோ-ஆசியா திட்டம் விவாதிக்கப்பட்டு வந்தது. அதற்கேற்றாற்போல் மெதுமெதுவாக வளர்ந்துவந்த ஷாங்காய் கார்ப்பரேசனை ரஷ்யா நன்கு பயன்படுத்திக் கொண்டது. ரஷ்யா, சீனா உள்ளிட்ட 6 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ கூட்டமைப்புதான் ஷாங்காய் கார்ப்பரேசன். 2015 ஜூலையில் இந்தியா மற்றும் பாகிஸ்தானும் இவ்வமைப்பில் இணைந்திருக்கின்றன. ஆப்கானிஸ்தான், ஈரான், மங்கோலியா உள்ளிட்ட நாடுகள் பார்வையாளராக தற்போது இருக்கின்றனர். இலங்கை, நேப்பாளம், கம்போடியா, துருக்கி உள்ளிட்ட பல நாடுகளும் இதில் இணைவதற்குவிருப்பம் தெரிவித்திருக்கின்றன. நேட்டோ, ஐ.எம்.எப்., உலக வங்கி மற்றும் ஐ.நா.சபை போன்ற பல அமைப்புகளுக்கு போட்டியான ஓரமைப்பாக இது உருவாகிவிடுமோ என்கிற அச்சம் அமெரிக்காவுக்கு உருவாகியிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. ஐரோப்பிய யூனியனைப் போல் ஆசிய யூனியனாக இது உருவெடுத்துவிடுமோ என்கிற பயமும் அமெரிக்காவுக்கு இருக்கிறது.

### சீனாவை அமெரிக்கா சுற்றிவளைத்தது எப்படி?

சீனாவை எதிர்கொள்ள அமெரிக்கா மேற்கொண்டிருக்கும் இராணுவ முயற்சிகள் அதிர்ச்சியளிக்கக் கூடியவை. சீனாவுக்கும் அதன் அருகிலிருக்கும் நாடுகளுக்குமிடையிலான எல்லையோரத் தகராறுகளையும், மீன்பிடி உரிமைகளில் இருக்கும் முரண்பாடுகளையும், சில தீவுகளுக்குச் சொந்தம் கொண்டாடும் பிரச்சினைகளையும் அமெரிக்கா நன்கு ஆராய்ந்து அப்படியான முரண்பாடுகளைப் பெரிது படுத்தி, அவர்களோடெல்லாம் போலியான நட்புறவை ஏற்படுத்திக் கொண்டது அமெரிக்கா. வியட்நாம், புருனே, பிலிப்பைன்ஸ், ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகளோடு தந்திரமான உறவை ஏற்படுத்திக் கொண்டு, அங்கெல்லாம் இராணுவ தளவாடங்களை அமைத்திருக்கிறது அமெரிக்கா.




வடகொரியாவும் ஆபத்து மிகுந்த நாடு என்னும் பயத்தை உருவாக்கியும், தன்னுடைய கருத்துக்கு மேலும் வலுச்சேர்த்தது அமெரிக்கா.

சீனாவின் மேற்குப் பகுதியில் சிஞ்சியாங் மாகாணம் இருக்கிறது. மத்திய ஆசியாவுடன் சீனாவை இணைக்கும் பகுதி இதுதான். இம்மாகாணத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட துருக்கி மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். சீனாவின் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழிக்கும், பெரும்பான்மை மக்களின் கலாச்சாரத்திற்கும் முற்றிலும் மாறுபட்டவர்களாக இருப்பதால், அவர்களின் முரண்பாடுகளை அமெரிக்கா பயன்படுத்திக்கொண்டு அவர்களின் மூலமாக சீனாவுக்கு எதிரான கலகங்களை விளைவிக்கிறது அமெரிக்கா. சிஞ்சியாங் மாகாணத்திற்கு அருகிலேயே அமெரிக்காவின் நட்பு நாடான ஆப்கானிஸ்தான் இருப்பதால், அமெரிக்காவுக்கு பெரிதும் உதவியாக இருக்கிறது. அதனை எதிர்கொள்வதற்கு சீனாவுக்கு இருக்கும் நட்புநாடு பாகிஸ்தான் தான். வரலாற்று ரீதியாக பாகிஸ்தானுடன் சீனாவுக்கு இருக்கும் உறவினை இதற்காக பயன்படுத்திக் கொள்கிறது சீனா.

பெட்ரோலியம் உள்ளிட்ட எண்ணைப் பொருட்களை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து மல்லாக்கா கால்வாய் வழியாகத்தான் சீனா இறக்குமதி செய்து வருகிறது. அக்கால்வாயின் நுழைவு வாசலானது இந்தோனேசியாவின் அச்சே என்கிற துறைமுகத்தில்தான் இருக்கிறது. அச்சேவில் 2004இல் தெற்காசியாவை உலுக்கிய சுனாமியால் அமெரிக்காவுக்கு ஓர் ஆதாயம் கிடைத்தது. சுனாமியால் கடுமையாகப் பதிக்கப்பட்ட அச்சேவில் மீட்புப் பணியினை நடத்துவதற்காகச் சென்ற அமெரிக்கா, அங்கே நிரந்தரமாகவோர் இராணுவத்தளவாடத்தை அமைத்து விட்டது. சீனாவுக்கு எண்ணை எடுத்துச்செல்லும் கப்பல்களை தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், மல்லாக்கா கால்வாயை அச்சேவில் அடைத்து விட்டாலேபோதும். சீனா ஒரே நாளில் ஆட்டங்கண்டுவிடும் என்கிற அளவுக்கு மல்லாக்கா கால்வாயும், அச்சே துறைமுகமும் முக்கியத்துவம் பெற்றவை. அச்சே நகரத்தில் அமெரிக்கா தனது இராணுவத் தளவாடத்தை அமைத்ததும் இதனை மனதில் வைத்துத்தான். அதனாலேயே பாதுகாப்பு நடவடிக்கையாக, சீனா அப்பாதையில் சில நாடுகளுடன் நட்பினை ஏற்படுத்தியிருக்கிறது. அப்படித்தான் பாகிஸ் தானின் கட்வார் துறைமுகத்திலும், இலங் கையின் கொழும்பு துறை முகத்திலும், வங்காள தேசத்திலும் எரிபொருள் நிரப்புவதற்கென தனது கப்பல்களை நிறுத்திக் கொள்ள சீனா அனுமதி பெற்றிருக்கிறது.

சீனாவுக்கு இறக்குமதியாகும் பெட்ரோலியப்பொருட்களில் 70% வரை மல்லக்கா கால்வாய் வழியாகத்தான் வருகிறது. அதனால் சீனாவுக்கு இப்பாதை மிகவும் முக்கியமானதாக இருந்துவருகிறது. பாகிஸ்தான் மற்றும் இலங்கையுடன் நட்புபாராட்டுவதும் ஒருவகையில் அமெரிக்காவின் தந்திரத்துக்கு பதிலடிகொடுக்கும் நோக்கில் ான். சீனாவின் உதவிகளைப் பெறுவதாலேயே, பாகிஸ்தானில் அவ்வப்போது ஆளில்லா ஏவுகணைகளை வீசுவதும், பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆயுதங்கள் வழங்கி குழப்பங்களை விளைவிப்பதுமாக இருக்கிறது அமெரிக்கா. இலங்கையில் ஈழக் கோரிக்கையினை ஆதரிப்பதுபோன்று நடித்து வெற்றுத் தீர்மானங்களை ஐ.நா.சபையின் பொதுச் சபையில் கொண்டுவந்து, அவ்வப்போது அமெரிக்கா பூச்சாண்டி காண்டுவதும் இதே காரணத்திற்காகத் தான். சீனாவின் கப்பல்களை இலங்கையின் கடற்தளத்தில் அனுமதிக்காமல் அதற்கு பதிலாக அமெரிக்கக் கப்பல் களை அனுமதிப்பதாக இலங்கை அரசு அறிவிக்குமாயேனால், அடுத்த கணமே 'ஈழம்' என்கிற வார்த்தையையே அமெரிக்கா மறந்துவிடுவது உறுதி.

### ரஷ்யாவை அமெரிக்காசுற்றிவளைத்தது எப்படி?

வியாபாரத்திற்கும் வாணிபத்திற்கும் மேற்குலகை மட்டும் நம்பியிருக்க முடியாது என்பதை உணர்ந்த ரஷ்யாவும் ஆசியப்பகுதியிலேயே நண்பர்களைத் தேடியது. அதனாலேயே கடந்த சில ஆண்டுகளில் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலானவர்த்தகபரிமாற்றங்கள் அதிகரித்திருக்கின்றன. பெய்ஜிங்குக்கும் மாஸ்கோவுக்கும் இடையிலான நட்புறவும் வளர்ந்தது.

சோவியத் யூனியன் காலத்திலேயே ஆப்பிரிக்கா மற்றும் கியூபாவிலிருந்து சோவியத் யூனியனை விரட்டியடிக்க வேண்டும் என்பதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகநாடுகளின் மிகமுக்கிய குறிக்கோளாக இருந்தது. அதற்காக 1976இல் சஃபாரி கிளப் என்றொரு புலனாய்வுத் துறையினை ஈரான், எகிப்து, சவுதி அரேபியா, மொரோக்கா மற்றும் பிரான்சு நாடுகள் இணைந்து உருவாக்கினர். அக்குழுவிற்கு அமெரிக்காவின் சி.ஐ.ஏ., இஸ்ரேலின் மோசாட் மற்றும் பிரிட்டினின் உளவுத்துறை ஆகியன ஆதரவு வழங்கின. ஆறு வாரத்துக்கு ஒருமுறை அவர்கள் அனைவரும் சந்தித்துக்கொண்டனர். கம்யூனிச எதிர்ப்புதான் அதன் மையக் குறிக்கோளாக இருந்தது. 1960-70 களில் ஆப்பிரிக்காவில் உருவாகியிருந்த ஜனநாயக மற்றும் கம்யூனிச ஆதரவு மனநிலையை வளரவிடாமல் தடுப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஆங்காங்கே குழப்பங்கள் விளைவிப்பதும், ஆயுதங்களை வழங்கி ஆட்சிக் கலைப்பு நடத்துவதுமே அக்குழுவின் தலையாய பணியாக இருந்தது. கியூபாவில் வெற்றிபெற்ற புரட்சி ஆப்பிரிக்காவின் அங்கோலா வரை பரவியிருந்ததைத் தடுப்பதற்காக, அங்கோலாவைக்குறிவைத்துபலநடவடிக்கைகளை சஃபாரி கிளப் எடுத்தது. சோவியத் யூனியன் உடைந்தபிறகும் ரஷியா ஒரு தோல்வியடைந்த தேசமாக சர்வதேச அரங்கில் பார்க்கப்பட்டபோதும், ரஷ்யாவிற்கு ஆப்பிரிக்காவில் நண்பர்களென என யாருமே மிச்சமிருக்கவில்லை. மேற்குலக நாடுகளால் துண்டாடப்பட்ட கண்டமாக ஆப்பிரிக்கா மாறிவிட்டது. மத்திய கிழக்கு நாடுகளும் அதற்குத் தப்பவில்லை. இஸ்ரேலும் துருக்கியும் அமெரிக்காவின் துணை நாடுகளாக மத்திய கிழக்கில் ஆதிக்கம் செலுத்தத் துவங்கிவிட்டன.

ரஷ்யாவின் சட்டப்படி இரண்டு முறைக்குமேல் யாரும் தொடர்ந்து அதிபராக இருக்கமுடியாது என்பதால், 2008 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் புடினால் போட்டியிடமுடியவில்லை. அதனால், அவரின் சீடர் என்றே அழைக்கப்பட்ட டிமிட்ரிமெட்வெடெவ் என்பவரை அதிபர் தேர்தலில் போட்டியிடச் செய்து வெற்றிபெற வைத்தார் புடின். டிமிட்ரி எப்போதும் புடினின் பேச்சைக்கேட்டே நடந்தார் என்றாலும், மேற்குலக நாடுகளின் போட்டியினை உறுதியாக சமாளிக்கும் திறனற்றவராக இருந்தார். மேற்குலக நாடுகளுடன் சற்று சமாதானமாகப் போனால், ஏதேனும் ஆதாயம் கிடைக்கலாம் என்றும் டிமிட்ரி நம்பினார். இதனால், எண்ணை வளமிக்க லிபியா மீது போர் தொடுக்கும் தீர்மானத்தை ஐ.நா. சபையில் ரஷ்யாவின் சார்பாக எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அத்தீர்மானத்தை தன்னுடைய வீட்டோ அதி காரத் தைக் கொண்டு முறியடித்திருக்க வேண்டும் என்பது புடினின் கருத்தாக இருந்தது. அப்படி ரஷ்யா செய்திருந்தால், கடந்த 4 ஆண்டுகளின் வரலாறே வேறு மாதிரியாக இருந்திருக்கும். 2012இல் நடந்த ரஷ்ய அதிபர் தேர்தலில், மீண்டும் புடின் அதிபர் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றிபெற்று அதிபரானார்.


கேள்வி தொடரும்....

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின்: தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




109

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### *பிரெஞ்சு நடுவர் பற்றிய சர்ச்சை*

பிரெஞ்சு இராஜதந்திரி ஒருவரை நடுவராகப் பணிக்கு அமர்த்துவது சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் மத்தியில் பரிமாறப்பட்ட கடிதங்கள் பத்திரிகைகளுக்குக் கசிந்துள்ளமையை அடுத்துக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும்சர்ச்சை எழுந்தது. மிகவும் அந்தரங்கமானதாகக் கருதப்பட்ட இவ் விவகாரத்தை அரச வட்டாரங்கள் எதற்காகப் பத்திரிகை உலகுக்குக் கசிய விட்டன என்பது எமக்குப் புரியாத புதிராக இருந்தது. மூன்றாம் தரப்புச் சர்வதேச மத்தியஸ்துவத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எதிராக நிற்கிறது என்ற பிரசாரத்தை மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே பிரெஞ்சு இராஜதந்திரியின் விவகாரம் பகிரங்கப்படுத்தப்பட்டது என்ற உண்மை எமக்குப் பின்புதான் தெரிய வந்தது. இந்தப் பொய்யான பரப்புரையை மறுத்துரைத்து, உண்மை நிலையை எமது மக்களுக்குத் தெரியப் படுத்தும் நோக்கத்துடன், பிரெஞ்சு நடுவர் பற்றிய கடிதங்களை நாம் வெளியிட முடிவெடுத்தோம். சந்திரிகாவுக்கும் பிரபாகரனுக்கும் மத்தியில் இவ்விவகாரம் குறித்துப் பரிமாறப்பட்ட கடிதங்களை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டோம். இவ்விவகாரத்தை, யாழ்ப்பாணப் பத்திரிகைகள் முக்கியம் கொடுத்துப் பிரசுரித்தன. இவ்விடயம் 'புலிகளின்குரல்' வானொலியிலும் ஒலிபரப்பாகியது.

1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் நாளன்று, யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டிய நான், ஜனாதிபதி சந்திரிகாவின் யோசனையை நாம் நிராகரித்ததன் காரணத்தை விளக்கிக் கூறினேன். பிரெஞ்சு நடுவரை அந்த நாட்டு அரசாங்கம் சிபாரிசு செய்தபோதும், அவர் பிரெஞ்சு அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதி அல்லர் என்றும், இராஜதந்திர சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஒரு தனி நபர் என்றும் விளக்கினேன். இந்தப் பிரெஞ்சு இராஜதந்திரி சந்திரிகாவுக்கு நன்கு பழக்கமானவர் என்றும் விடுதலைப் புலிகளுக்கு அவரைப் பற்றி எதுவுமே தெரியாது எனக் கூறிய நான், இப்படியான ஒருவர் நடுநிலையாளராகப் பாரபட்சமின்றிச் செயற்படுவது கடினம் என்றும் சுட்டிக்காட்டினேன். விடுதலைப் புலிகள் மூன்றாம் தரப்பு அனுசரணைக்கோ அன்றி மத்தியஸ்துவத்துக்கோ எதிரானவர்கள் அல்லர் என வற்புறுத்திக் கூறிய நான், அரசுக்கும் புலிகளுக்கும் மத்தியிலான பேச்சுகள் முறிவடைந்தால் மூன்றாம் தரப்பை ஈடுபடுத்துவது பற்றி நாம் பரிசீலனை செய்வோம் என விளக்கினேன்.

பத்திரிகையாளர் மாநாட்டில் நான் தெரிவித்த கருத்துக்களையும், தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சந்திரிகா - பிரபா கடிதங்களையும் ஒன்று சேர்த்து, பிரெஞ்சு நடுவர் விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான நிலைப்பாடாக ஒரு பத்திரிகை அறிக்கையை, மார்ச் மாதம் 7 ஆம் நாளன்று அரசியல் பிரிவு வெளியிட்டது. தமிழில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை லண்டனிலுள்ள புலிகளின் அனைத்துலகத் தலைமைச் செயலகம் மீண்டும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பத்திரிகை அறிக்கையாக வெளியிட்டது. இவ்விதம், பிரெஞ்சு இராஜதந்திரி பற்றிய சந்திரிகா - பிரபா கடிதங்களின் மூலப் பிரதிகள் முதலில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, பின்னர் அதே விடயம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டதால் இறுதி வடிவம், மூலப் பிரதியின் சொற்பிரயோகத்திலிருந்து வேறுபட்டதாக அமைந்தது.

ஜனாதிபதி சந்திரிகா, மார்ச் மாதம் 9 ஆம் நாள் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில், லண்டன் பத்திரிகை அறிக்கையில் ஒரு பத்தியை மேற்கோள் காட்டி, அது தனது கடிதத்தின் மூலப் பிரதிக்கு மாறுபட்டதாக இருப்பதாய் குற்றம் சாட்டினார். மொழிபெயர்ப்புக்களால் ஏற்பட்ட வேறுபாடுகள் பற்றி எதுவுமறியாத சந்திரிகா அம்மையார், கடிதத்தின் உள்ளடக்கத்தை விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு வேண்டுமென்றே திரித்து, உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளியிட்டிருப்பதாகக் கண்டனம் தெரிவித்தார். பிரெஞ்சு இராஜதந்திரியை ஒரு தனிப்பட்ட நபராகவும் தனது நண்பராகவும் சித்திரித்துக் காட்ட முனைவது உண்மைக்கு மாறானதென வாதிட்ட அவர், அந்த இராஜதந்திரி பிரெஞ்சு அரசாங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்றும் அவருக்குப் பிரெஞ்சு அரசாங்கத்தின் ஆதரவு உண்டு என்றும் குறிப்பிட்டார். அரசியல் பேச்சுகளுக்கு முன்னராக, தமிழ் மக்களின் அத்தியாவசிய வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கை பற்றிக் குறிப்பிட்ட சந்திரிகா, தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் கோரிக்கைகளை வழங்கினால் இராணுவ ரீதியாக பாரதூரமான விளைவுகள் ஏற்படலாமென எச்சரித்தார். சந்திரிகாவின் கடிதத்தில் விட்டுக்கொடுக்காத கடும்போக்குத் தொனித்தது. கட்டம் கட்டமாகப் பேச்சுகளை முன்நகர்த்தும் விடுதலைப்புலிகளின் அணுகுமுறையை நிராகரித்த அவர், தமிழ் மக்களின் அவசர வாழ்க்கைப்பிரச்சினை பற்றியும், அரசியல் பிரச்சினை பற்றியும் ஒரே நேரத்தில் சமநிலையாகப் பேசப்பட வேண்டுமென வற்புறுத்தினார். இறுதியாக, தனது கடித முடிவுரையில், ஏப்ரல் மாதம் 2 ஆம் நாளிலிருந்து 10 ஆம் நாள் வரையான காலகட்டத்தில் அரசியல் தீர்வுக்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். சந்திரிகாவின் கடிதத்தைக் கீழே பிரசுரிக்கிறோம்.

*9 மார்ச் 1995*

*திரு.வே.பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*

*அன்பின் திரு.பிரபாகரன் அவர்கட்கு,*

*தமிழீழ விடுதலைப் புலிகளது அனைத்துலகத் தலைமையகம் மார்ச் 7 ஆம் நாளன்று வெளியிட்ட பத்திரிகை அறிக்கையைப் படித்தபோது, அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் மத்தியிலான பேச்சுகள் குறித்து இரண்டு முக்கிய பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன.*

*முதலாவது, 1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் நாள் நீங்கள் எனக்கு எழுதியதாக இப்பத்திரிகை அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கும் கடிதத்தின் விவரம் இவ்வாறு தரப்படுகிறது.*

*"சிறிலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியிலான பேச்சுகள் இரகசியமானதாக அல்லது பகிரங்கமானதாக நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம். அரசாங்கத்துடனான எமது பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து எமது மக்களும், சர்வதேசச் சமூகமும் உன்னிப்பாக கவனம் செலுத்துவதால், ஒருதனிப்பட்ட நபர்மூலம் இரகசியமாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது பொருத்தமானதாகவோ அல்லது சரியானதாகவோ எமக்குத் தோன்றவில்லை. உங்களது கடிதத்தில் நீங்கள் எழுப்பிய கேள்விகளை நாம் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்தோம். சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் நீங்கள் நியமித்த பிரதிநிதிகளுக்கும் நாங்கள் நியமித்த பிரதிநிதிகளுக்கும் மத்தியிலேயே பேச்சுகள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம். உங்களது பிரதிநிதிகள் அரசாங்கத்தின் கருத்துக்களைத் தெளிவுபடுத்த, எமது பிரதிநிதிகளும் அவ்வாறே செய்வார்கள். இவ்விதம் பேச்சுகள் அமைந்தால் அது பயனுள்ளதாக இருக்கும். எமது பிரச்சினை இப்பொழுது சர்வதேசக் கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழரின் இனப் பிரச்சினையில் தமிழ் மக்களும் அனைத்துலகச் சமூகமும் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகின்றது. இரு தரப்புப் பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து தமக்குத் தெரியப்படுத்த வேண்டுமென எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இப்படியான சூழ்நிலையில் ஒரு தனிநபர் மூலம், இரகசியமாக உங்களுடன் நான் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது உகந்தது அல்ல."*

*1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் நாளன்று நான் உங்களிடமிருந்து ஒரு கடிதம் மட்டுமே பெற்றுக் கொண்டேன். அந்தக் கடிதத்தில் மேற்குறிப்பிட்ட பந்தி இருக்கவில்லை. பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி நீங்கள் எழுதிய கடிதத்தின் உள்ளடக்கம் என்னவென்பது விடுதலைப் புலிகளின் அனைத்துலக அரசியல் பிரிவினருக்கு தெரியவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறோம். அதனால்தான் நீங்கள் எழுதிய கடிதத்தின் உள்ளடக்கம் இங்கு திரித்துக் கூறப்பட்டுள்ளது.*

*1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் நாளன்று நான் உங்களுக்கு எழுதிய கடிதத்தில், கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன் என்பதை உங்களது கவனத்துக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். "இந்த விடயமாக பிரெஞ்சு அரசாங்கத்தை நான் அணுகிய போது மதிப்பு மிக்க பிரெஞ்சு நாட்டவர் ஒருவரை எமக்குத் தந்துதவ பிரான்ஸ் இணக்கம் தெரிவித்தது... இவர் பிரான்ஸ் நாட்டின் தூதுவராகப் பணிபுரிந்தவர்... நீங்களும் இணக்கம் தெரிவித்து, இரு தரப்புமாக நாம் அவரது பாதுகாப்புக்கு உறுதி அளித்தால் அவர் இந்தப் பணியைச் செய்யத் தயாராக இருக்கிறார். இவர் எமக்கு மத்தியில் நடுவராகச் செயற்படுவாரே அன்றி, எமது கருத்துப் பரிமாற்றத்தில் பிரெஞ்சு அரசாங்கத்தை எவ்வகையிலும் ஈடுபடுத்த மாட்டார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்."*

*ஆகவே, நடுவராக நான் சிபாரிசு செய்தநபர் பிரெஞ்சு அரசினால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் பிரெஞ்சு அரசின் ஆதரவு பெற்றவர் என்பதும் நன்கு புலனாகிறது. எனினும், இவர் பிரெஞ்சு அரசாங்கத்தின் தலையீடு இன்றி, எனது அரசாங்கத்தினதும் உங்களது அமைப்பினதும் விருப்பத்துக்கு இசைவாகப் பணியாற்ற இருந்தார்.*

*பிரெஞ்சு அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நடுவரை, தனிப்பட்ட நபர் என்றும் எனது நெருங்கிய நண்பர் என்றும் சித்திரிப்பது முற்றிலும் தவறானதாகும். உண்மையில் இவர் யார் என்பது எனக்குத் தெரியாது. இவர் பிரெஞ்சு அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டவர். இவர் கொழும்புக்கு வந்த பின்புதான், முதன் முதலாக நான் இவரைச் சந்தித்தேன். ஆகவே, இல்லாத ஒரு கடிதத்தைக் கற்பித்து, அதன் அடிப்படையில் விடுதலைப் புலிகள் இயக்கம் உண்மைகளைத் திரித்துக் கூறியிருப்பதையிட்டு எமது அரசாங்கம் வேதனையடைகிறது.*

*இரண்டாவதாக, விடுதலைப் புலிகள் பேச்சுகளுக்குத் தயாரென லண்டனில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்படுகிறது. ஆனால், பெப்ரவரி 25 ஆம் நாள் நீங்கள் எழுதிய கடிதத்தில், பேச்சுகள் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை.*

*அரசியல் பேச்சுகளுக்கு விரைவாக ஒரு நாளை நிர்ணயிக்குமாறு நான் விடுத்த வேண்டுகோளுக்கு நீங்கள் இதுவரை ஒரு பதிலும் தரவில்லை. புனர்நிர்மாண வேலைகள் குறித்து ஏற்கனவே நடைபெற்று வரும் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நீங்கள் சில முன்நிபந்தனைகளை விதித்துள்ளீர்கள். அந்த நிபந்தனைகள் வருமாறு:-*

*-பூநகரி இராணுவ முகாமை அகற்றுவது.*
*-வடகிழக்குக் கடலில் மீன்பிடித் தடையை முற்றாக நீக்குவது.*
*-கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் தரித்த புலிப் போராளிகளுக்கு நடமாட்டச் சுதந்திரம் வழங்குவது.*
*-பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்குவது.*

*நிரந்தரமான, நிலையான சமாதானத்துக்குப் புறம்பாக இக்கோரிக்கைகள் வழங்கப்பட்டால் பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும். தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில், எவ்வளவு கூடுதலான சலுகைகளை உங்களுக்கு விட்டுக்கொடுக்க முடியுமோ அவற்றை எல்லாம் நாம் உங்களுக்கு வழங்கிவிட்டோம்.*

*இந்த விவகாரங்களைப் பற்றிக் கதைப்பதற்காக அரசியல் பேச்சுகளை ஆரம்பிப்பதைப் பிற்போடத் தேவையில்லை. இரண்டு விடயங்களும் ஒரே சமயத்தில் இணைவாகப் பேசப்படலாம். இதுதான் அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்து வருகிறது. ஒன்றன் பின் ஒன்றான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, வடக்கில் வாழும் மக்களின் அவசர நாளாந்தப் பிரச்சினைகளையும், இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வுப் பிரச்சினையையும் ஒரே சமயத்தில் இணைவாக வைத்துப் பேசலாம் என்பதே அரசாங்கத்தின் யோசனையாகும்.*

*பெப்ரவரி மாதம் 25 ஆம் நாள் நீங்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது போல, 'அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளதும் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் மத்தியிலேயே பேச்சுகள் நடைபெற வேண்டும்' என்ற யோசனையை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.*


*இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பேச்சுகள் ஏப்ரல் மாதம் 2 ஆம் நாளிலிருந்து 10 ஆம் நாள் வரையிலான கால இடைவெளியில் ஆரம்பமாக வேண்டும். ஆரம்ப கட்டமாக இரண்டு நாள்கள் பேச்சுகளை நடத்துவதற்காக எமது பிரதிநிதிகளை நாம் யாழ்ப்பாணம் அனுப்பி வைப்போம். இதற்கு முன்னர், அரசியல் தீர்வுக்கான எமது யோசனைத் திட்டத்தை உங்களுக்கு அனுப்பிவைப்போம்.*

*உடன் பதில் அனுப்பி வைத்தால் நன்றியாக இருப்பேன்.*

*அன்புடன்*
*உங்கள் நேர்மையுள்ள*
*சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா*

(தொடரும்...)

# உருப்படியாக எதையும் நல்லாட்சி செய்யவில்லை



பஸில் ராஜபக்ஷ இப்படிக் கூறுகிறார்

நாட்டில் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் அவசியம் உணரப்படும்போதும் இந்த அரசு எதனையும் உருப்படியாகச் செய்யவில்லை.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாணந்துறை நகரசபை முன்னாள் தவிசாளர் இபாஸ் நபுஹான் தலைமையில் பாணந் துறையில் இடம்பெற்ற முஸ் லிம்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எங்களது எதிரிகள், எங்களை வீழ்த்தப் பிரதான ஆயுதமாக இனவாதத்தைக் கையில் எடுத்திருந்தனர். அந்த வகையில் தான் அவர்கள் வெற்றியும் பெற்றனர். இன்று சிறுபான்மையின மக்கள் தங்களது ஒளியாகக் கருதிய இந்த ஆட்சியை எதிர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எமது ஆட்சிக் காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் பலவாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டோம். எமது வடக்கு அபிவிருத்திக்குச் சில கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காத நிலையிலும் நாம் அங்கு அபிவிருத்திகளைச் செய்தோம்.

தற்போதைய ஆட்சிக்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றன. இவ்வாறான ஒத்துழைப்புகள் எமது ஆட்சிக் காலத்தில் எங்களுக்குக்கிடைத்திருந்தால் எங்களது செயற்பாடுகளின் நிலை வேறாக அமைந்திருக்கும். இந்த ஆட்சியானது இந்த நிலையைத்தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மத நல்லிணக்கத்தை கொண்டு வர வேண்டும். இன்றைய நிலையில் சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபட இது எமக்கு அவசியமானதும் கூட.

எமது ஆட்சிக் காலத்தில் நாம் ஒரு போதும் இனவாத ரீதியான முன்னெடுப்புக்களை மேற்கொண்டதில்லை. நான் இன்று பேசிக்கொண்டிருக்கும் இவ்வூரில் (பாணந்துறை) முஸ்லிம் ஒருவரே தவிசாளராக இருந்தார். இது பெரும்பான்மை இனத்தவர்கள் அதிகம் வாழும் ஓர் ஊராகும். இங்கு நாங்கள் ஒரு முஸ்லிமை தவிசாளராக நியமித்துள்ளமை நாங்கள் இனவாத ரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பவர்கள் அல்லர் என்பதற்கான துல்லியமான சான்றாகும்.

அளுத்கம கலவரம் இடம்பெற்ற பின்னர் நாம் அந்த மக்களுக்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுக்கொடுத்தோம். சேதமடைந்தவற்றை உடனடியாக புனரமைத்துக் கொடுத்தோம். அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்னர் ஆட்சி மாற்றம் இடம்பெற்று விட்டது.

ஆனால், இன்று அளுத்கமவைக் காட்டி முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் அவர்களுக்குப் பொருள் சேத நஷ்ட ஈட்டை கூட பெற்றுக் கொடுக்கவில்லை. அளுத்கம கலவரம் தொடர்பிலான விசாரணைகளைக் கூட கிடப்பில் போட்டு விட்டனர். இதனை விசாரித் தால் உண்மைகள் வெளிப் பட்டு விடும் என்ற அச்சம்தான் கிடப்பில் போட்டதன் பின்னணியாகும்.

எமது ஆட்சிக் காலத்தில் சம்பிக்க ரணவக்கவின் அடியாள்களாக இருந்த ஓரிரு தேரர்கள் மட்டுமே முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டார்கள். முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் புறக்கணிக்குமாறு குரல் கொடுத்தார்கள். ஆனால், இன்று ஊர் ஊராக முஸ்லிம்களுக்கு எதிராக போஸ்டர் ஒட்டுகின்றார்கள். ஊருக்கொரு அடியாள்கள் உருவாகி விட்டார்கள். இவற்றைத் தடுத்து நிறுத்த முஸ்லிம் அமைச்சர்கள் திராணி அற்று இருக்கின்றமையுடன் இவ்வாட்சியுடன் ஒட்டி உறவாடிக் கொண்டுமிருக்கின்றனர்.

எமது ஆட்சிக் காலத்தில் இவ்வாறான ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றபோது அவற்றை எமக்கு எதிராகத் திருப்பி விட்டார்கள். முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, இந்த அரசுக்கு வாக்களித்த முஸ்லிம்களும் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு மௌனித்துள்ளனர்.- எனக் குறிப்பிட்டார். (ஐ)

## குற்றத்தை ஒப்புக் கொண்ட துமிந்த சில்வா!

கொழும்பு, ஏப்.07

சொத்து தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்கத் தவறிய வழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

2010, 2011 மற்றும் 2013 ஆகிய மூன்று வருடங்களாக சொத்து தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்கத் தவறியமையாலேயே துமிந்தவுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தது.



இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு மேலதிக நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே துமிந்த சில்வா குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு தொடர்பில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## திட்டமிட்ட குற்றச் செயல்களை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு

கொழும்பு, ஏப்.07

இலங்கையில் குழுக்களாக இணைந்து திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைத் தடுக்க விசேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பொலிஸ் பிரிவு நாட்டில் எந்தவொரு இடத்தில் இடம்பெறும் திட்டமிட்ட குற்றம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்புரைக்கு அமைய இந்த பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவரது நேரடி கட்டுப்பாட்டில் மேல் மாகாணம் குற்ற மற்றும் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்கவின் கண்காணிப்பின் கீழ் இந்தப் பொலிஸ் பிரிவு இயங்கவுள்ளது என்று கூறப்பட்டது. (ஐ)

## ஓமான் மஸ்கட் - கொழும்புக்கு இடையே கட்டுநாயக்காவில் இருந்து விமானசேவை

கொழும்பு, ஏப். 07

ஓமான் மஸ்கட் மற்றும் கொழும்புக்கு இடையிலான புதிய விமான சேவையை கட்டுநாயக்கவில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் புதிய சேவை இன்று முதல் தினமும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து மாலை 7.20 மணிக்கு புறப்படும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமானம், இரவு 9.55 மணியளவில் மஸ்கட் விமான நிலையத்தைச் சென்றடையும். பின்னர், மஸ்கட்டிலிருந்து இரவு 11.05 மணியளவில் புறப்படும் இந்த விமானம் அதிகாலை 4.55 மணியளவில் கொழும்பை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான சேவை ஒரு வாரத்துக்கு ஐந்து தடவைகள் இடம்பெறும் என்றும் இந்த விமான சேவை ஊடாகத் தங்களது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை முகாமையாளர் தீபல் பல்லே கன்கொட தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 17 ஆம் திகதி முதல் இந்தியாவில் உள்ள விசாகப்பட்டினம், ஹைதராபாத், கோயம்புத்தூர், கோவா மற்றும் வாரணாசி ஆகிய பகுதிகளுக்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாமலின் நீலப்படையணிக்கு ஒரு கோடி 40 லட்சம் ரூபா! வழங்கியோர் விவரம் மர்மம்!!

கொழும்பு, ஏப்.07

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பதற்கு அண்மித்த தினத்தில், நாமல் ராஜபக்ஷவின் நீலப்படை அணியின் இளைஞர்களுக்கு ஒரு கோடி 40 லட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.

தலைமைத்துவ பட்டறைக்குக் கிடைத்திருந்த 14 மில்லியன் ரூபா பணத்தின் மர்மம் தொடர்பில், ஊழல் மோசடி மற்றும் அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரணைஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இருந்து 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரையில் இந்த பயிற்சி தேசிய இளைஞர் சபையில் நடத்தப்பட்டுள்ளது.

இதற்காக 35 லட்சம் ரூபா பணத்தை தேசிய இளைஞர் சபையே செலவிட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அனைத்துச் சட்ட திட்டங்களையும் மீறி அரசியல் கட்சி ஒன்றின் அவசியத்துக்காக தேசிய இளைஞர் சபையால் இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த 14 மில்லியன் ரூபா பணம் இந்தப் பயிற்சிக்காக பெற்றுக் கொண்டது எவ்வாறு என்பது இன்னமும் மர்மமாகவே காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, கடந்த 31 ஆம் திகதி ஆணைக்குழுவால் அழைக்கப்பட்டிருந்தார். அவரிடம் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அப்போதைய அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் சிலர் இது தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தப் பட்டறையில் கலந்து கொண்ட இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் கையொப்பமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 20ஆயிரம் பசுக்களை இறக்குமதி செய்யத் திட்டம்

கொழும்பு, ஏப்.07

தேசிய பால் உற்பத்தியை விருத்தி செய்யும் நோக்குடன், 20 ஆயிரம் பசுக்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக ஒரு தொகைப் பசுக்கள் மே மாதம் 17 ஆம் திகதி இலங்கைக் குக் கொண்டு வரப்படவுள்ளன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படவுள்ள உயர் தரப்பசுக்களை, வர்த்தக அடிப்படையில் பால் பண்ணைகளை முன்னெடுப்பவர்களுக்கு சலுகை விலைக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும், அதற்கு தேவையான நிதியை இலங்கை மத்திய வங்கியால் முன்னெடுக்கப்படும் சலுகைக் கடன் செயன்முறையின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பால் உற்பத்தி தொடர்பில் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது முதற்கட்டமாக நன்மையடையும் பாற் பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்தப் பண்ணைகளின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறைந்த பட்சம் 10 பசுக்களைப் பெற்ற பண்ணையில் சமுர்த்தி சலுகை பெறும் இருவருக்காவது வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சர் பி. ஹரிசன் முன் வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## போதைப் பொருள்களின் பின்னணியில் பெரும் நாடகம்?



ஸ்ரீதரன் எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, ஏப்.07

யாழ்ப்பாணத்தில் கைப்பற்றப்படும் போதைப் பொருள்களின் பின்னணியில் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் உடந்தையாக உள்ளனர்.

கேரள கஞ்சா கிலோ கணக்கில் கைப்பற்றும் பொலிஸார் ஏன் இதுவரை குற்றவாளிகளைக் கைது செய்யவில்லை?.

-இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் , மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்கான சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்-

போதைப் பொருள் கடத்தலின் பின்னணியில் நாடகம் அரகேற்றப்படுகின்றது. வடக்கில் பாதுகாப்புப் படையினரை நிலை நிறுத்துவதற்காகவே இந்த நாடகம்.

இதன்பின்னணியில் இடம்பெயர்ந்தவர்களை அகதி முகாம்களில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான எத்தனமும் உள்ளதா என்ற சந்தேகமும் எழுகிறது.

காணாமல் போனோர், காணி விடுவிப்பு போன்ற விடயங்களுக்குத் தீர்வு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஜனாதிபதி வழங்கப் போகும் பதில் என்ன? தமிழ் மக்களுக்கு நீதிமன்றம் என்ன நீதி வழங்கப் போகின்றது?- என்றார் அவர். (ஐ)

## நாளை மின் தடை



யாழ்ப்பாணம்,ஏப்.07

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம்,கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களின் சில இடங்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்.பிரதேசத்தில் நெடுந்தீவிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் அமைதிபுரம், கரித்தாஸ் குடியிருப்பு, அக்கராயன்குளம், மேட்டுக்கேணி, ஆரோக்கியபுரம், மணியங்குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், சோலை,கொமாண்டோ இராணுவ படை முகாம் (முருகண்டி) ஆகிய இடங்களிலும் மின் தடை ஏற்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படாது

நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு





கொழும்பு, ஏப்.07

அமைச்சர்களுக்கோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ சம்பள உயர்வு வழங்கப்படாது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதியரசர்களின் சம்பளங்களை உயர்த்தி அதன் ஊடாக, அதன் பின்னர் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களை உயர்த்த அரசு முயற்சிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பின் 108(1) இன் அடிப்படையில் நீதியரசர்கள் மற்றும் நீதிபதிகளின் சம்பளங்கள் உயர்த்தப்படும் எனவும்,அரசமைப்பின் 68(1) இன் அடிப்படையிலேயே அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)







வடமாகாண தொழிற்றுறைத் திணைகளத்தால் சாவகச்சேரி கோயில் குடியிருப்பு பிரிவில் அமைத்துள்ள தும்புசார் உற்பத்தி நிலையத் திறப்புவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வைபவ ரீதியாக நிலையத்தைத் திறந்துவைத்தார். (ஐ-10)

## பொங்கல் விழா

சுன்னாகம், ஏப்.07

சுன்னாகம் தாளையம்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வருடாந்தப்பொங்கல் விழா எதிர் வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும். (ச)

## ஜனாதிபதிக்கு பௌத்த பீடங்கள் கடிதம்

கொழும்பு, ஏப். 07

இருபத்தியொரு விடயங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகள் சார்பில் அவர்களின் உதவியாளர்களான வண. தேரர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிவைத்தனர்.

தலதா மாளிகைக்கு முன்னால் உள்ள வீதிகளைத் திறக்கக்கூடாது, போதை வஸ்து மையமாக இலங்கை மாறுவதைத் தடுத்தல், அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல், புதிய அரசமைப்பைக் கொண்டு வருதல், வடக்குக்கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன் வைத்தல், ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பேணுதல் ஆகிய வற்றை வலியுறுத்தியே இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. (உ)

## இந்திய உதவிகளில் வீழ்ச்சி நிலை!

கொழும்பு, ஏப்.07

இலங்கைக்கு, இந்தியா வழங்கி வந்த உதவிகளில் பெரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்திய ஊடகமொன்று இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

2016 - 2017 ஆம் ஆண்டுக்கான உதவிகளை இந்தியா குறைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

2014-2015 ஆம் ஆண்டுக்காக 499 கோடி இந்திய ரூபாவும், 2015-2016 ஆம் ஆண்டுக்காக 403 கோடி இந்திய ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், 2016-2017 ஆம் ஆண்டுக்காக வெறும் 73 கோடி இந்திய ரூபாவே வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## சுற்றுலா பயணிகள் வருகையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப்.07

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து, 841 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த நிலையில், இவ்வாண்டின் மார்ச் மாதத்தில் ஒரு லட்சத்து 88 ஆயிரத்து 76 சுற்றுலா பயணிகளே இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கையானது, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.5 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், ஓடுபாதை சீரமைப்புப் பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களாக காலை 8.30 முதல் பிற்பகல் 4.30 வரை 8 மணித்தியாலங்களுக்கு மூடப்பட்டிருந்தது.

இதுவும் சுற்றுலாப் பயணிகளது வருகையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# இரு அணிகளின் பிரிவு தற்காலிகமே!

## ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் முடிந்ததும் அ.தி.மு.காவின் இரு அணிகளும் ஒன்றிணையும் என்கிறார் பன்னீர்



சென்னை, ஏப்.07

தமிழகத்தில் அ.தி.மு.க.வுக்குள் ஏற்பட்டிருக்கும் பிரிவு தற்காலிகமானதே. ஆர்.கே.நகர் தேர்தலின் முடிவுகள் வெளியானதும் இரண்டு அணிகளும் மீண்டும் இணையும் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஆர்.கே. நகர் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. (புரட்சித் தலைவி அம்மா) அணியும், அ.தி.மு.க. (சசிகலா) அணியுமே கடும் போட்டியில் இறங்கியுள்ளன.

இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுத் தாய்க் கழகத்தின் தலைமையைக் கைப்பற்றிவிட வேண்டும் என்று இரண்டு பிரிவினரும் கடும் போட்டியில் இறங்கியுள்ளனர்.

இந்தநிலையில், இடைத் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு பன்னீர் செல்வம் பேட்டி அளித்துள்ளார். அதில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இரண்டு அணிகளுமே தேர்தலுக்குப் பின் ஒன்று சேர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

சசிகலா அணியில் சட்டசபை உறுப்பினர்கள் 122 பேர் உள்ளனர். அவர்கள் தங்கள் மனசாட்சியைக் கேட்டு நடக்க ஆரம்பித்தால் நிச்சயமாக எமது அணியில் வந்து இணைவார்கள். எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் வளர்த்தெடுத்த கட்சி இது. மக்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்ட இந்தக் கட்சியை மீண்டும் மக்களின் நலன்பால் திசை திருப்புவதே நாம் செய்ய வேண்டிய தற்போதைய வேலை.- என்றார்.

அவரது கருத்தை சுட்டிக் காட்டி கருத்துத் தெரிவித்த ஆர்.கே. தொகுதி மக்கள்-

'தேர்தலுக்குப் பின் அவர்கள் ஒனிறிணைவார்கள் என்றால், தேர்தலுக்கு முன் ஏன் பிரிந்திருக்க வேண்டும்? இது மக்களை ஏமாற்றும் செயல்' என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (எ)

## ஒடிசாவில் விபத்து; ஐவர் உயிரிழப்பு!



ஒடிசா மாநிலத்தில் பஸ் ஸும் உழவு இயந்திரமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர்.

பரிபடா நகரத்தில் இருந்து றஜிரங் கபூர் என்ற இடத்தை நோக்கி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பயணிகளை ஏற்றிச் சென்ற அந்த பஸ் உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு 2 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார். (எ)

### இந்தியா—பாக்.பிரச்சினை:

## அமெரிக்கத் தலையீட்டை நிராகரித்தது புதுடில்லி!


புதுடில்லி, ஏப்.07

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் பங்கு கொள்ள விரும்புகிறது என்று ஐ.நா. அமைப்புக்கான அமெரிக்க தூதுவர் நிக்கி ஹாலி தெரிவித்திருந்த கருத்தை இந்தியா நிராகரித்துள்ளது.

இதுதொடர்பில் இந்திய மத்திய வெளியுறவு செய்தித் தொடர்பாளர் கோபால் பாக்லே தெரிவித்தவை வருமாறு:-

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான பிரச்சினைகளில் தீவிரவாதமும், வன்முறையும் இல்லாத சூழலில் தீர்வு காண்பதில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு மாறவில்லை.

பிராந்தியத்தின் அமைதிக்கும், நிலையான தன்மைக்கும் பாகிஸ்தான் தொடர்ந்து மிகப் பெரிய அச்சுறுத்தலாக திகழ்கிறது. எனவே, பாகிஸ்தானில் இருந்து மேற்கொள்ளப்படுகின்ற தீவிரவாதத்துக்கு எதிராக சர்வதேச சமூகமும்,அமைப்புகளும் அந்த நாட்டின் மீது சர்வதேச வழிமுறைகள் மற்றும் ஆணைகள் என்பவற்றை செயற்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.- என்றார். (எ)



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நல்ல அறிவை கொடுக்க வேண்டும் என்று கூறி புதுடில்லி வீதிகளில் அங்கப்பிரதட்சணம் செய்து தமிழக விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயிகளின் போராட்டம் நேற்று 23 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், விவசாயிகள் தங்கள் கை, கால்களை கட்டியவாறு வீதிகளில் புரண்டு போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

## ஜம்மு—நகர் நிலச்சரிவு: மூடப்பட்டது நெடுஞ்சாலை



ஜம்மு, ஏப்.07

ஜம்மு-ஸ்ரீநகர் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.

இதனால் அந்தப்பகுதிக்கான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, வீதிகளை சீர்செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலையில் பனிஹல் - ராம்பன் இடையே உள்ள பல்வேறு பகுதிகள் தற்போது சீரமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளன என்று போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று நாள்களாக தொடரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

## பாக்.ஆக்கிரமிப்பு காஷ்மீர் இந்தியாவுக்கே சொந்தம்!

### மத்திய அரசு திட்டவட்டமாக அறிவிப்பு

சென்னை, ஏப்.07

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் இந்தியாவுக்கே சொந்தமானது என்று இந்திய மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தின் போது ஆக்கிரமிப்பு காஷ்மீர் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும் போதே வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விவாதத்தின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆக்கிரமிப்பு காஷ்மீரின் கில்ஜித் - பல்திஸ்தான் பகுதிகளை தனது நாட்டின் 5 ஆவது மாகாணமாக அறிவிக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருவது கண்டனத்துக்குரியது.

அந்தப்பகுதி உட்பட ஜம்மு - காஷ்மீர் முழுவதும் இந்தியாவுக்கே சொந்தம். இதற்கு பாகிஸ்தான் உரிமை கொண்டாடக் கூடாது.

பிரிவினையின் போது இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக கில்ஜித் -பல்திஸ்தான் இருந்த போதும், பிரிட்



டன் முகவராக பொறுப்பில் இருந்த அதிகாரிகள், பாகிஸ்தான் இராணுவம் அந்தப்பகுதியில் இருப்பதற்கு அனுமதியளித்தனர். அதன் காரணமாகவே 1947 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தான் அந்தப் பகுதியை ஆக்கிரமித்துள்ளது.- என்றார். (எ)

காலைக்கதிர்


## ஐ.எஸ்.தீவிரவாதிகள் அறுவர் ரஷ்யாவில் கைது!



ஐ.எஸ். தீவிரவாதிகள் 6 பேர் ரஷ்யாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்பெர்க்கில் பகுதியிலேயே அந்த ஐ.எஸ் தீவிரவாதிகள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

தீவிரவாத அமைப்புக்காக ஆள்சேர்ப்பில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மத்திய ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதம் முதல் அவர்கள் செயற்பட்டு வந்துள்ளனர் என்று தெரி விக்கப்படுகிறது. சென் பீட்டர்ஸ் பேர்க் மெட்ரோரயில் நிலையங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம் பவத்தில் 14 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் வரை காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

# வடகொரியாவுக்குப் பதிலடி: தென்கொரியா வெற்றிகரமாக ஏவுகணைச் சோதனை!



கொரிய தீபகற்பத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் வடகொரியாவின் நட வடிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தென் கொரியா ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக நடத்தி உள்ளது.

தென் கொரியாவை அச்சுறுத்தும் வகையில் வட கொரியா தனது ஆயுத பலத்தை அதிகரித்து வருகிறது. குறிப்பாக, தென் கொரியாவுக்கு ஆதரவு அளிக்கும் அமெரிக்காவை மிரட்டும் வகையில் கடந்த சில ஆண்டுகளாக அணு ஆயுத சோதனைகளையும் நடத்தி வருகிறது.


ஐ.நா. பொருளாதாரத்தடை, உலக நாடுகளின் கண்டனம் என எதையும் பொருட்படுத்தாமல் தனது படை பலத்தை அதிகரித்து வரும் வடகொரியா, சமீபத்தில் ஜப்பான் கடல் பகுதியில் ஒரு ஏவுகணையைச் செலுத்தி சோதனை நடத்தியுள்ளது.

வடகொரியா அணு ஆயுதங்களை அதிகரித்து வரு வது தொடர்பாக விரைவில் சீனாவும், அமெரிக்காவும் விவாதித்து முக்கிய முடிவு எடுக்கப் படும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. இந்தச் சந்திப்புக்கு மிரட்டல் விடுக் கும் வகையில் வட கொரி யாவின் ஏவுகணைச் சோதனை இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தென் கொரியா புதிய ஏவுகணையைச் சோதனை செய்துள்ளது. உள்நாட்டுத் தயாரிப்பான இந்த ஏவுகணை 800 கி.மீ. தூரம் சென்று வட கொரியாவின் எந்த நகரையும் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் மேலும் சில புதிய ஏவுகணைகளை இந்த ஆண்டு இராணுவத்தில் இணைப்பதற்கு தென் கொரியா திட்டமிட்டுள்ளது. (எ)

# அமெரிக்க-மெக்ஸிக்கோ எல்லைச்சுவரின் முதலாவது மாதிரி வரைவுகள் வெளியீடு!




வொஷிங்டன், ஏப். 07

அமெரிக்க- மெக்ஸிக்கோவுக்கும் இடையே அமைக்கப்பட உள்ள எல்லைச் சுவரின் முதலாவது மாதிரி வடிவமைப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

குடியேற்றவாசிகள் தனது நாட்டுக்குள் வருவதைத் தடுப்பதற்காக அமெரிக்காவுக்கும் மெக்ஸிகோவுக்கும் இடையில் எல்லைச் சுவரை கட்டியெழுப்ப அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் அந்த சுவர் தொடர்பான முதலாவது மாதிரி வடிவமைப்புகள் வெளியாகியுள்ளன.

மேற்படி சுவர் தொடர்பான வடிவமைப்பை முன்வைத்த நிறுவனம் ஒன்று அந்தச் சுவரை நிர்மாணிக்கும் பணியாளர்களை தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

அதேசமயம் பிறிதொரு நிறுவனம் ஊழியர்கள் துப்பாக்கிகளைக் கொண்டு செல்ல முடியுமா என்று வினவியுள்ளது.

இந்தநிலையில் அந்த எல்லைச் சுவர் தொடர்பான வடிவமைப்புகளை முன் வைத்த 10 நிறுவனங்களில் 4 நிறுவனங்கள், மாதிரிச் சுவர்களை வடிவமைக்க தெரிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் நேற்று தகவல் வெளியிட்டுள்ளன.

இதன் பிரகாரம் மாதிரிச் சுவர்கள் சான்தியகோவில் கால் மைல் தூரப் பிராந்தியத்தில் எல்லையிலிருந்து 120 அடிக்குள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்த ஒவ்வொரு மாதிரிச் சுவருக்கும் அமெரிக்க அரசு தலா 2 லட்சம் டொலர் முதல் 5 லட்சம் டொலர் வரை செலவிடவுள்ளது. (எ)

# சோமாலியாவில் தாக்குதல்: ஏழு பேர் உயிரிழந்தனர்!



சோமாலியா தலைநகர் மொகாடிஷுவில் இடம் பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாதுகாப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்களின் வீடுகளுக்கு அருகாமையில் மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்தநாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோமாலியாவில் அண்மையில் பாதுகாப்பு அமைச்சராக புதிதாகப் பதவி ஏற்றுக் கொண்டிருந்த மகெமெட் அபூகர் இஸ்லோ பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்துவதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஐரோப்பாவின் மிகப்பெரிய எரிமலையின் தீக்குழம்புகள் ஆறாக ஓடும் காட்சி!



ஐரோப்பாவின் மிகப்பெரிய எரி மலையான 'எட்னா' கடந்த சிலமாதங்களாக மாக்மா குழம்புகளை கக்கி வரும் நிலையில், தற்போது தீ குழம்புகள் ஆறாக ஓடும் காணொளி வெளியாகியுள்ளது.

எட்னாஎரிமலையின் தொடர்ச்சியான உயிர்ப்பினால் அந்தப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். மேலும்அந்த எரிமலையை ஆய்வு செய்து வந்த ஆய்வாளர்களும் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தப்பி ஓடிச் செல்கின்றனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், கடந்த 1992 ஆம் ஆண்டிற்கு பிறகு தற்போதுதான் எட்னாவின் உயிர்ப்புத்தன்மை அதிகமாகவுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அந்த மலையின் வெப்பநிலை தற்போது 1000 பாகை செல்ஸியசைத் தண்டியுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுமார் 3000 மீற்றர் பரப்பில், 650 அடி உயரத்தில் எட்னா எரிமலை தீக்குழம்புகளையும், புகையையும் கக்கி வருவதால், இது வரை சுமார் 10 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். (எ)

# பாதிக்கப்பட்ட மக்களின் புகலிடமாக பெருவின் தொல்பொருள் மையங்கள்



வரலாற்றில் இதுவரை இடம்பெறாத அளவில் பெருவில் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்கள், பெருவின் மிகப் பழமையான மற்றும் பெரும் மதிப்புக்குரிய பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அந்தவகையில், நரிஹுவாலா தொல்பொருள் மையம், வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களின் புகலிடமாக மாறியுள்ளது. வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட சேதங்கள் மோசமடைந்த நிலையில், சுமார் 300 குடும்பங்கள் இந்தப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி தொல்பொருள் மையம் கடல் மட்டத்திலிருந்து 131 அடி உயர்வில் காணப்படுவதால், அவ்விடத்தில் மிகுந்த பாதுகாப்பாகத் தாங்கள் உணர்வதாக அங்குள்ள மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை அந்த தொல்பொருள் மையத்தின் மீட்புத் திட்ட உதவியாளர் கருத்துத் தெரிவிக்கையில்-


'அந்த இடத்தின் புனிதத் தன்மையை நாம் உணர்கின்றோம். எனினும், மக்கள் வெள்ளத்தால் பெரும் நெருக்கடி நிலையை எதிர் கொண்டு வருகின்ற நிலையிலேயே அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.' - என்றார்.


பெருவை தாக்கிய கடும் வெள்ளப்பெருக்கால் இதுவரை சுமார் நூறுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கோலாகலமாக இடம்பெற்றது ஐ.பி.எல். ஆரம்ப நிகழ்வு!










ஐதராபாத், ஏப். 07

10 ஆவது இந்தியன் பிரிமீயர் 'லீக்' கிரிக்கெட் போட்டியின் தொடக்க விழா ஐதராபாத் நகரில் கோலாகலமாக இடம்பெற்றுள்ளது. நடிகை எமி ஜாக்சன் நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறியுள்ளன.

இந்தியன் பிரிமீயர் 'லீக்' என்று அழைக்கப்படும் ஐ.பி.எல். இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி 2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

வீரர்கள் ஏலம் முறையில் எடுக்கப்பட்டனர். பல நாட்டு வீரர்கள் ஓர் அணியில் இணைந்து ஆடியதன் காரணமாக இந்தப் போட்டிக்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு உள்ளது.

இந்நிலையில், 10 ஆவது இந்தியன் பிரிமீயர் 'லீக்' கிரிக்கெட் போட்டி ஐதராபாத் நகரில் கோலாகலமாக ஆரம்பித்துள்ளது.

இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் சச்சின், சேவாக், கங்குலி, லட்சுமணன் ஆகிய 4 பேரும் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

நடப்பு சம்பியன் ஐதராபாத் அணியின் தலைவர் டேவிட் வார்னர் வெற்றிக் கிண்ணத்துடன் மைதானத்தில் வலம்வந்தார்.

நடிகை எமி ஜாக்சன் உற்சாகமாக நடனமாடினார். அப்போது, புலியாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றன.

இதனையடுத்து இரவு 8 மணிக்கு நடைபெற்ற முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் சன்ரைசர்ஸ் ஐதராபாத்- ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

ஐ.பி.எல். போட்டி மே மாதம் 21 ஆம் திகதி வரை 41 நாள்கள் இடம்பெறவுள்ளது. 8 அணிகள் விளையாடும் இந்தப்போட்டியில் ஒவ்வொரு அணியும் லீக் சுற்றில் 14 ஆட்டங்களில் விளையாடும். 'லீக்' முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் 'பிளே ஒவ்' சுற்றுக்கு முன்னேறும்.

# பெங்களூரை வீழ்த்தியது ஐதராபாத்!



ஐதராபாத், ஏப். 07

ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியை 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் முதல் போட்டியாக நடப்பு சம்பியன் ஐதராபாத் சன் ரைசர்ஸ் மற்றும் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் இடையே நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு ஆட்டம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணியின் தலைவர் வொட்சன் பந்து வீச முடிவு செய்தார்.

இதனையடுத்து, ஐதராபாத் அணியின் தலைவர் வோர்னர் மற்றும் தவான் இருவரும் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினர்.

அதிரடியாக விளையாட தொடங்கிய வார்னர் 8 பந்துகளில் 14 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் ஷிகார் தவானுடன் ஹென்ரிகியூஸ் இணைந்து இருவரும் சீராக ஓட்டங்களைச் சேர்த்தனர். ஷிகார் அதிரடியாக பவுண்டரிகளை விளாசினார். இருப்பினும் 40 ஓட்டங்கள் எடுத்திருந்த போது தவான் பிடியெடுப்பின் மூலம் அவர் ஆட்டம் இழந்தார்.

பின்னர் களமிறங்கிய யுவராஜ் சிங் அதிரடியாக விளையாடி அரைசதம் விளாசினார். 27 பந்துகளில் 62 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

ஹென்ரிகியூஸ் 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் ஐதராபாத் அணி 207 ஓட்டங்களை எடுத்தது. பெங்களூர் அணிக்கு 208 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

கடினமான இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் கிறிஸ் கெயில் 21 பந்துகளில் 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மந்தீப் சிங் மற்றும் ஹெட் ஆகியோர் நல்ல அடித்தளம் அமைத்த போதிலும் அடுத்தடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். பெங்களூர் அணியின் தலைவர் வொட்சன் 22 ஓட்டங்களில் நெஹ்ரா பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்வரிசை வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறியதால் அந்த அணி 19.4 ஓவர்களில் 172 ஓட்டங்களை எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது. ஐதராபாத் அணியின் நெஹ்ரா, புவனேஷ்வர் குமார், ராஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆரம்ப ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ள ஐதராபாத் அணி இரண்டு புள்ளிகளை பெற்று வெற்றிக் கணக்கை தொடங்கியுள்ளது.

# மந்த கதியில் பந்து வீசிய இலங்கைக்கு அபராதம்!



கொழும்பு, ஏப். 07

நடைபெற்று முடிந்த இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது இருபதுக்கு 20 போட்டியில், மந்த கதியில் ஓவர்களை வீசி போட்டியை தாமதப்படுத்திய காரணத்திற்காக இலங்கை அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

உபுல் தரங்க தலைமையிலான இலங்கை வீரர்கள் போட்டிக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரத்தை எடுத்து கவனயீனமாக செயற்பட்ட காரணத்திற்காகவே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் சபையின் போட்டி மத்தியஸ்தர் என்டி பிக்ரொப்ட் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

ஐ.சி.சி இன் வீரர்கள் மற்றும் வீரர்களின் உதவிச் செயற்பாட்டாளர்கள் சட்டக்கோவை விதிமுறையில் சரம் 2.5.1 இற்கு அமைவாக ஓவர்கள் வீசுவதில் யாராவது சிறிய குற்றம் இழைத்தால் அந்த அணியின் வீரர்களுக்கு போட்டிக் கட்டணத்தில் 10 சத வீதமும் அணித் தலைவருக்கு போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதமும் தண்டப்பணம் அறவிடப்படும்.

இதன் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட இந்த குற்றத்தினால் இலங்கை அணி வீரர்கள் ஒவ்வொருவரும் போட்டியின் மூலம் கிடைக்கப்பெற்ற ஊதியத்தில் 10 சதவீதத்தையும், அணித் தலைவர் உபுல் தரங்க 20 சதவீதத்தையும் அபராதமாக செலுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கின்றனர்.

தரங்க தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தினை ஒப்புக்கொண்டமையுடன் தண்டப்பணம் செலுத்துவதையும் ஏற்றுக்கொண்டார்.

மைதான நடுவர்களான ரன்மோர் மர்டினேஸ் மற்றும் ரவிந்திர விமலசிறி, மூன்றாம் நடுவர் ருச்சிர பல்லியகுருகே மற்றும் நான்காம் நடுவர் தீபல் குணவர்தன ஆகியோர் மூலம் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றிருந்த இந்தப்போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் அணியினரை வீழ்த்தி அசத்தல் வெற்றியை பெற்றிருந்தது.

இதன்போது முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் அணி, 6 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களை 20 ஓவர்கள் நிறைவில் பெற்றிருந்தது.

பதிலுக்கு ஆடியிருந்த இலங்கை அணி 18.5 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். போட்டி மிகப்பெரிய புகழை அடையும் என்று எதிர்பார்க்கவில்லை!

## சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு



ஐதராபாத், ஏப். 07

ஐ.பி.எல். போட்டி மிகப்பெரிய புகழை அடையும் என நான் எதிர்பார்க்கவில்லை என்று கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற 10 ஆவது ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப விழாவின்போதே சச்சின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.பி.எல். போட்டி மிகப்பெரிய வெற்றியை பெற்று புகழை அடையும் என்று நான் நினைக்கவில்லை. 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதை என்னால் நம்ப முடியவில்லை. இது மிகப் பெரிய சாதனையாகும். ரசிகர்களின் ஆதரவு இல்லாமல் இதற்கான வாய்ப்பே இல்லை.

2007 ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டி குறித்து அறிவிப்பு வெளியானது. 2008 ஆம் ஆண்டு ஐ.பி.எல். அறிமுக போட்டியில் ஆடினேன். இந்த போட்டி மிகப்பெரியதாக அமையும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

ஐ.பி.எல். போட்டி இந்தியாவுக்கு பெருமை அளிக்கும் வகையில் இருக்கிறது. எல்லா வீரர்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். ஒவ்வொரு தொடரும் கடுமையான போட்டியில் முடிகிறது.

இந்த போட்டியை ரசிகர்கள் வெகுவாக விரும்புகிறார்கள். அனுசரணையாளர்கள் பல்வேறு மட்டத்தில் ஆதரவைத் தெரிவிக்கிறார்கள். இதில் விளையாடும் 8 அணிகளுமே சமபலத்துடன் தான் இருக்கின்றன. அதைச் சிறப்பாக பயன்படுத்துவதை பொறுத்து வெற்றி அமையும்.- என்றும் தெரிவித்துள்ளார்.

# சதுரங்கப் போட்டி நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 07

இலங்கை சதுரங்க சம்மேளத்தினால் நடத்தப்படும் சதுரங்கப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் ஏற்கனவே, மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, பதிவுகளை மேற்கொண்டோர் நாளைய தினம் காலை 8 மணிக்கு சமுகம் தரலாம் என்றும், புதிதாகப் பதிவுகள் மேற்கொள்ள விரும்புபவர்கள் இன்றைய தினம் மாலை 3 மணியிலிருந்து 6 மணி வரை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்துக்கு சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


போட்டியின் ஆரம்ப நாளான நாளைய தினம் காலை 8.30 மணிக்குப் பின்னர் சமுகம் தரும் போட்டியாளர்கள், போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள் எனவும், போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு வருவது கட்டாயமானது எனவும் சதுரங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

# ஐ.பி.எல்.லில் 100 விக்கெட்டுகளை வீழ்த்தினார் ஆசிஷ் நெஹ்ரா!

ஐதராபாத், ஏப். 07

தற்போது நடைபெற்று வரும் 10 ஆவது ஐ.பி.எல். தொடரில் விளையாடி வரும் 37 வயதான ஆசிஷ் நெஹ்ரா, பெங்களூர் அணிக்கு எதிராக 2 விக்கெட் எடுத்ததன் மூலம் ஐ.பி.எல். தொடரில் 100 விக்கெட்டுகளை வீழ்த்திச் சாதனை படைத்துள்ளார்.

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் ஆசிஷ் நெஹ்ரா. ஐ.பி.எல். போட்டிகளில்



அவர் மும்பை இந்தியன்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், புனே வாரியர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் போன்ற அணிகளுக்காக விளையாடியுள்ளார். சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்காக கடந்த ஆண்டில் இருந்து விளையாடி வருகிறார்.

ஆசிஷ் நெஹ்ரா மிகவும் நேர்த்தியாகப் பந்துவீசி வருகிறார். பெங்களூர் அணிக்கு எதிராக அவர் நேற்று முன்தினம் தொடர்ச்சியாக 2 விக்கெட்டுகளை (வொட்சன், அரவிந்த்) கைப்பற்றினார். இதன் மூலம் ஆசிஷ் நெஹ்ரா ஐ.பி.எல். தொடர்களில் 100 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

# அஸ்வினுக்கு பதிலாக புனே அணியில் மற்றொரு தமிழக வீரர்!

புனே, ஏப் 07

இந்திய அணியின் பன்முக ஆட்டக்காரரான அஸ்வின் இடத்தை நிரப்புவதற்கு மற்றொரு தமிழக வீரரான வொஷிங்டன் சுந்தரை புனே அணி இணைத்துள்ளது.

இந்தியாவில் இடம் பெறும் 10 ஆவது ஐ.பி.எல். தொடர் நேற்று முன்தினம் கோலகலாமாக தொடங்கியது. முதல் போட்டியில் ரோயல் சலஞ்சர் பெங்களூரு அணியும், சன்ரைசர்ஸ் ஹைதரபாத் அணியும் மோதின.

இந்நிலையில் நேற்றைய இரண்டாவது போட்டியில், புனே அணியும், மும்பை அணியும் மோதின. இப்போட்டி மஹாராஷ்டிரா மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

புனே அணியில் நட்சத்திர வீரரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான அஸ்வின்



காயங்கள் காரணமாக ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார். இதனால் அவருக்கு இணையான ஒரு சுழற்பந்து வீச்சாளரை புனே அணி தேடிக்கொண்டிருந்தது.

தற்போது அதற்கு ஏற்ற வகையில் தமிழகத்தைச் சேர்ந்த பன்முக ஆட்டக்காரர் வொஷிங்டன் சுந்தரை புனே அணி எடுத்துள்ளது.

17 வயதான வொஷிங்டன் சுந்தர், 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணப் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டு அனைவரது கவனத்தையும் தன் பக்கம் இழுத்தவர்.

அஸ்வினைப் போன்றே சிறப்பாக பந்து வீச்சை வொஷிங்டன் சுந்தர் வெளிப்படுத்துவாரா என்ற எதிர்பார்ப்பு தமிழக ரசிகர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது.

## ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தவிடயம்குறித்துவிவாதம் நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஒரு மாதத்துக்கு முன்னரே கோரினோம். இப்போதுதான்வாய்ப்புவழங்கப்பட்டுள்ளது.

"விவாதத்துக்கு 210 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் 52 எம்.பிக்களைக்கொண்ட கூட்டு எதிரணிக்கு 32 நிமிடங்கள்மாத்திரமேதரப்பட்டுள்ளன.

"பிரேரணையைக்கொண்டு வரும்தரப்புக்கேகூடுதல்நேரம் வழங்கப்படவேண்டும்.

''தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன சபை ஒத்திவைப்புவேளைபிரேரணையைக்கொண்டுவரும்போதுமட்டும்அவற்றுக்குஒருமணிநேரம் வழங்கப்படுகின் றது.

''கூட்டு எதிரணிக்கு மட்டும் ஏன்குறுகியநேரஒதுக்கீடு? இது என்ன நியாயம்? எமது தரப்புக்கும் ஒரு மணிநேரம் அவசியம்" – என்றார் தினேஷ்.

ஆளுங்கட்சிபிரதமகொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலகஇதற்குப்பதில்தந்தார்.

''மறைந்த அமரபுர வண. தவுந்தன ஞானசார தேரருக்கு இன்று (நேற்று) மாலைசுதந்திர சதுக்கத்தில் இறுதிக்கிரியை. அவருக்கு கௌரவம் செலுத்தும்வகையில்சபைநடவடிக்கைகளை 3 மணியுடன் முடிப்பதற்குக் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. இதற்கு இந்தச் சபையில் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள்என்றேநம்புகின்றோம்." – என்றார்.

அதனைக் கூட்டு எதிரணியினர் ஏற்கவில்லை.

சமாளிக்க முயன்றார் சபாநாயகர்.

"ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் இன்று முன்கூட்டியே முடிந்துள்ளன. அதில் 30 நிமிடங்கள் எஞ்சியிருக்கின்றன. எனவே, சுமுகமாக பேச்சு நடத்தி அந்த 30 நிமிடங்களைப் பெற்றுக்கொள்ளலாம்தானே'' – என்றுஅவர்ஆலோசனைமுன்வைத்தார்.

அவ்வேளையில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்டலஸ்அழகப்பெருமஎம்.பி..

"தேரருக்கு இறுதிக்கிரியை செலுத்துவதற்காக நேரம் குறைக்கப்பட்டுள்ளது. செய்வதற்கு வேறுவழியில்லைஎன்ற தொனியில்ஆளுங்கட்சி பிரதம கொறடாகருத்துவெளியிடுகின்றார். தேருக்காகநேரம்குறைப்பதற்கு பொது எதிரணி எதிர்ப்பில்லை. எனவே, பொதுஎதிரணி முன்வைக்கும் தர்க்கத்தை இதனுடன்தொடர்புபடுத்தவேண்டாம்.

"தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன பிரேரணைகள் கொண்டுவரும் போது அந்தத் தரப்புக்கு கூடுதல் நேரம் ஒதுக்கப்படும். ஆனால், இன்று (நேற்று) 210 நிமிடங்களுள் ஏழில் ஒருபங்குநேரமேஎமக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது வெட்கப்படவேண்டிய விடயமாகும்." – என்றார் டலஸ்.

இதையடுத்து கருத்துவெளியிட்ட சபைமுதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல –

"எந்த நாளும் இதே பிரச்சினையை இவர்கள் எழுப்புகின்றார்கள். ஐக்கியமக்கள்சுதந்திர முன்னணியின் தலைவரான ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதன் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு அவர்களால் தீர்வைக் காண முடியும். ஜனாதிபதியுடனானசந்திப்புக்கானநேரத்தை வேண்டுமானால் நாம் அவர்களுக்குப் பெற்றுத் தருகின்றோம். பிரச்சினையைத்தீர்த்துக் கொள்ளுங்கள்." – என்றுசிரித்தபடியே கூறினார்.

சிறிது நேரத்துக்குப் பின்னர் மீண்டும் கூச்சல் ஏற்பட்டது:

நிலைமையைக்கட்டுப்படுத்த சபாநாயகர்எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

இதையடுத்து எஞ்சியுள்ள 30 நிமிடங்களை கூட்டு எதிரணிக்கு வழங்க சபாநாயகர் இணக்கம் தெரிவித்தார்.

ஏனைய விடயங்களைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசலாம் என்றார் அவர்.

இதையும் தினேஷ் தரப்பு ஏற்கவில்லை. தமக்குநிரந்தரத் தீர்வொன்று அவசியம் என வாதிட்டது.

"நாடாளுமன்றத்தில் 6 கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. எதிரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஈ.பி.டி.பி. ஆகிய 3 கட்சிகளே இருக்கின்றன. எனவே, அவர்களுக்கு (கூட்டு எதிரணி அணிக்கு) ஏற்பட்டுள்ள பிரச்சினை அவர்களின் உட்கட்சி விவகாரமாகும். அதை அவர்கள்தான் தீர்க்க வேண்டும்" என்று சுட்டிக்காட்டி கூட்டு எதிரணி மீது கடும் விமர்சனங்களை ஆளும்கட்சியினர் முன்வைத்தனர்.

எதிரணியின் பந்துல குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, உதயகம்மன்பில்லஆகியயோரும்கருத்துகளைவெளியிட்டனர்.

கூட்டுஎதிரணியினர், ஆளும் தரப்பில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் நாடாளுமன்றுக்கு வந்தவர்களே. ஆகவே. ஐ.ம.சு.முன்னணியின்அனுமதிமற்றும்ஆலோசனையின்றி இவ்விடயத்தில் தம்மால் ஒரு முடிவு எடுக்க முடியாது என்றார் சபாநாயகர்.

"இன்று விவாதத்தை நடத்துவோம். பிறிதொரு நாளில் இது பற்றிப் பேசி இறுதி முடிவை எடுக்கலாம்" – என்றார் அவர். ஆனால் கூட்டு எதிரணியினர் இணங்கவில்லை.

இதனால், இருதரப்புக்கும் இடையில் வாக்குவாதம் நீடித்தது. இதையடுத்து முற்பகல் 11.25மணிக்குசபைநடவடிக்கைகளை சபையின் அனுமதியுடன் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிவரை சபாநாயகர் ஒத்திவைத்தார். (உ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷவும் 2016 செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் டொயட்டோ ரக லாண்ட் குரூஸர் மற்றும் ஸ்ரேஷன் வேகன் ஆகிய வற்றை இறக்குமதி செய்திருக்கின்றனர்.

இதற்காக இருவருக்கும் தலா 3 கோடி 45 லட்சம் ரூபா தீர்வைத்தள்ளுபடிவழங்கப்பட்டுள்ளது. (உ)

## காணாமலாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக நீதி விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்; அத்துடன்இவ்வாறானசம்பவங்கள்மீளநிகழாமைஉறுதிப்படுத்தப்பட வேண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறவினர்களால்முன்வைக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்அனைவரும்விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ள சர்வதேசமன்னிப்புச்சபை, பயங்கரவாததடைச்சட்டம்உடனடியாக நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக சர்வதேசத் தரத்திலான புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

வடபகுதியில் செயற்பட்டு வரும்மனிதஉரிமைசெயற்பாட்டாளர்கள் இப்போதும்பல்வேறு சவால்களுக்குமுகம்கொடுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொண்ட கள விஜயங்களின் பின்னரே இந்த அறிக்கையைத் தமது அமைப்பு வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (உ)

## சிலாவத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க.

மன்னார் மாவட்ட முசலிப் பிரதேச செயலர் பிரிவில் சிலாவத்துறையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமை அகற்றுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில்ஐ.தே. கட்சியின் தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட்ட எம்.எம்.எம்.சல்மான் எம்.பியும் –

முள்ளிக்குளம் கடற்படை முகாமை அகற்றுமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதனும் –

பிரதமரைக் கோரியிருந்தனர். அதற்கு நாடாளுமன்றில் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

"சிலாவத்துறைமுகாம்தேசிய பாதுகாப்பு விடயத்தில் தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்தது. சட்டவிரோத ஆள்கடத்தல் மற்றும் போதைப் பொருட் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு அந்த முகாம் அவசியம். அங்கு 34 ஏக்கர் நிலத்தை கடற்படை பயன்படுத்துகின்றது. அதில் ஆறு ஏக்கரை விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"முள்ளிக்குளம் முகாம் அரச காணியிலேயே அமைந்துள்ளது. அதை ஒட்டியுள்ள ஐந்நூறு ஏக்கர் காணி 2012 இலும், பின்னர் 252 ஏக்கர் காணியும் பொதுமக்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. இப்போது முகாம் அமைந்துள்ள காணிகள் வில்பத்து வனவள பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரியது. அதற்குள் வரும் றோமன் கத்தோலிக்கதேவாலயமும், றோமன் கத்தோலிக்க பாடசாலையும் கடற்படையால் கவனிக்கப்படுகின்றன. தேவாலயத்துக்கும் பாடசாலைக்குமாக 87 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

"பாடசாலையையும், தேவாலயத்தையும் பயன்படுத்தும் மக்களுக்கான வீதிகள், மின்சாரம், போக்குவரத்து, சுத்தமானகுடிதண்ணீர் வசதிகளை கடற்படையினரும், பொலிஸாருமேவழங்கிவருகின்றனர்.

அந்தப் பாடசாலைக்கு ஆறு ஆசிரியர்களைக் கடற்படையே பணிக்குச்சேர்த்துக்கொடுத்தது. அந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்தவர்களுக்காக கடற்படையால் 27 வீடுகளும், இந்திய உதவித் திட்டத்தின் கீழ் 134 வீடுகளும், மீள்குடியேற்ற அமைச்சினால் 26 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

"வடக்கு, வடமேற்குக்கரையோரங்களில் போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்கு இந்த முகாம் அவசியம். அது அரச காணியில் அமைக்கப்பட்டிருப்பதால் அதை அகற்ற வேண்டிய தேவை இல்லை."

–இவ்வாறு பிரதமர் மேலும் தெரிவித்தார். (உ)

## ஆவணங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதம்நேற்று நடைபெறாமல் குழம்பியமையால் ஏமாற்றத்துடன் திரும்பினார்.

விவாதத்தில் பங்கேற்க ஆவணங்களுடன் வந்த சம்பந்தன் ஏமாற்றத்துடனும், கவலையுடனும் திரும்பினார் என்ற தகவலைப் பின்னர் கூட்டு எதிரணியின் பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து தினேஷ் குணவர்த்தன எம்.பியும் வெளிப்படுத்தினார்.

சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் அமைந்துள்ளஊடகவியலாளர்களின் அறைக்கு வந்த கூட்டு எதிரணி உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன, நாமல் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும மற்றும் ஜயந்ததர்மதாச ஆகியோர் சபையில் நடந்தவை குறித்து ஊடகவியலாளர்களுடன் பேசினர்.

அங்குதினேஷ்கருத்துவெளியிட்டார். அவர்கூறியவைவருமாறு:-

இது அசாதாரணமானதாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனே என்னிடம் குறிப்பிட்டார். சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை முன்வைக்கும் தரப்புக்கு குறைந்தபட்சம் 45 நிமிடங்களாவது வழங்கியிருக்க வேண்டும் என சம்பந்தன் தெரிவித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சிப் பிரதம கொறடா என்ற தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே பேசுகின்றார். கூட்டுஎதிரணியைக் கட்சியாக ஏற்றுக்கொண்டே கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் எமக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நாங்களே கொண்டுவந்தோம். அதற்கான நேரம் வழங்கும்போது மாத்திரம்நொண்டிச்சசாட்டுக்கூறுகின்றனர்.

நாட்டுக்கு எதிராக ஜெனீவாவில் கொண்டுவரப்பட்டுள்ள யோசனையில் உள்ள பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டியுள்ளது. அதற்காகவே இந்த விவாதத்தைக் கொண்டு வந்தோம். இதில் பேசுவதற்காக நான் (தினேஷ்), நாமல், டலஸ், ஜயந்த தர்மதாச ஆகியோர் தயாராக இருந்தோம். எனினும், மொத்தம் 210 நிமிடங்களில் எமக்கு வெறுமனே 32 நிமிடங்கள் மாத்திரமே ஒதுக்கபட்டுள்ளன. நான் என் பிரேரணையை முன்வைப்பதற்கே இந்த நேரம் போதாது. – என்றார். (உ)

## திட்டமிட்டே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்துவிட்டது. ஏனெனில், விவாதம் ஆரம்பித்தது முதல் சபையில் வெறும் இரண்டு அமைச்சர்கள் மட்டுமே இருந்தார்கள்.

இது நாட்டுக்கு முக்கியமானதொரு விடயம் என்பதால்தான் நாம் இதனைச் சபைக்குக் கொண்டு வந்தோம். எமது தரப்புச் சார்பாகப் பேச்சு நடத்த நான்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்திருந்தோம். இவர்களுக்கு 90 நிமிடங்கள் வழங்கப்படும் என்றே நாம் எதிர்பார்த்தோம்.

ஆரம்பத்தில் 100 நிமிடங்கள் வரை நாம் எதிர்ப்பார்த்தோம். நேற்று சபை நடவடிக்கைகள் பிற்பகல் 3 மணியளவிலேயே முடிவடைந்த காரணத்தால் தான் 90 நிமிடங்களை நாம் எதிர்பார்த்தோம். 52 உறுப்பினர்கள் உள்ள கூட்டு எதிரணிக்கு இதனையும்விட அதிக நேரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இறுதியில் வெறும் 32 நிமிடமே ஒதுக்கப்பட்டது. இது எவ்வகையில் நியாயம்? 52 உறுப்பினர்களுக்கு 32 நிமிடங்கள் எனில், ஒருவருக்கு இவ்விவாதத்தில் 40 நொடிகள் மட்டுமே பேச முடியும்.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் எமக்கு இவ்வாறு செய்வது எவ்வகையிலும் முறையற்றது. இது எமக்கு மட்டுமன்றி, போரை வெற்றிகொண்ட இராணுவத்தினர் உள்ளிட்ட ஒட்டுமொத்தத் தரப்பினருக்கும் அநீதி இழைக்கும் நடவடிக்கை. – என்றார்.

## சி.வீ. எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றாத கூட்டம் ஒன்றில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்று தொடர்பாகவேநேற்றுஇருவருக்கும் முரண்பாடு தோன்றியது.

தாம் உட்பட அமைச்சர்கள் எவரும் இல்லாமல்எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றை அமைச்சரவையை ஏற்றுக்கொள்ளக் கூறுவது தவறானது என முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறினார்.

அதற்கு, இந்த அவையை விட அமைச்சரவைக்கு அதிகாரம்இல்லை. அமைச்சரவை ஒன்றும் பெரிதல்ல என அவைத் தலைவர்அடிக்கடிகூறிக்கொண்டிருந்தார்.

வடக்குமாகாணசபைஉறுப்பினர்களுக்கான பேரவைச் செயலகக் குழுக் கூட்டம் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதிக்கு மேலதிகமாக, மாகாண் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடைஒதுக்கீட்டில்உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மேலதிகமாக நான்கு மில்லியன் ரூபா வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அந்த நிதியில் இரண்டு மில்லியன் ரூபாவுக்கு நான்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேற்படாத திட்டங்களை உறுப்பினர்கள் முன்மொழியலாம். அடுத்த இரண்டு மில்லியன் ரூபாவும் உள்ளூராட்சி வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும்.

இதற்காக உறுப்பினர்கள் தாம் விரும்பும் உள்ளூராட்சி சபைவீதிகளைத்தெரிவுசெய்து முன்மொழியலாம். முன்மொழிவுகளைநேரடியாகபிரதிப்பிரதம செயலாளருக்கு (திட்டமிடல்) அனுப்பி வைக்கவேண்டும். அவற்றின் பிரதிகளை தொடர் நடவடிக்கைக்காகபேரவைச்செயலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும்தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி நிதி ஒதுக்கப்பட்ட கூட் டத்தில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடக்குமாகாண பிரதிப் பிரதம செயலாளர் எஸ்.யு. சந்திரகுமாரன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) ஆர்.உமாகாந்தன், வடக்கு மாகாணத் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்வி.சொக்கநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எனினும், அதன் பின்னர் கூடிய அமைச்சரவை, மேற்படி நான்கு மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுத் திட்டத்திற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

மேற்படிநிதி ஒதுக்கீடுதொடர்பாக நேற்று சபையில் கருத்துக் கூறிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், அந்தக் கூட்டத்தில் தாம் இருக்கவில்லை எனவும், ஆகையால் இந்த முடிவு தொடர்பில் ஆலோசிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அப்போதுகுறுக்கிட்ட அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், இந்தச்சபையை விட அமைச்சரவைக்குஅதிகஅதிகாரம்இல்லை எனக் கூறினார்.

அதன்போது, "நீங்கள்எடுத்த தீர்மானத்தை அமைச்சரவை ஏற்க வேண்டும் எனக் கூறுவது தவறு" என்று கூறிய முதலமைச்சர், "அன்றையகூட்டத்தில்அமைச்சர்கள் யாரும் இருந்தார்களா?" எனவும் கேள்வியெழுப்பினார்.

அதற்குப்பதிலளித்தஅவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், "இந்த அவையை விட அமைச்சரவை ஒன்றும் பெரிதல்ல" – எனமீளவும்கூறினார். இவ்வாறு முதலமைச்சரும் அவைத்தலைவரும்தொடர்ச்சியாகக்கருத்துக்களால் முரண்பட்டனர்.

அப்போது எழுந்த சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் –

"இவை சபைக்கு வெளியே கதைக்கப்பட வேண்டிய கதைகள். இங்கேகதைத்துநேரத்தை விரயம் செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. வேண்டுமாயின் சபை முடிந்த பின்னர் இது தொடர்பாக நாகரிகமாகப் பேசி முடிவெடுக்கலாம்." – என்றார்.

மேலும் தொடர்ந்து கருத்துக் கூறிய அவர், "நான்கு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு தொடர்பான கூட்டம் நடத்தி முடிவெடுக்கப்பட்டதுஎனஅமைச்சரவைக்கு அறிவிக்கவில்லை. அவ்வாறிருக்கையில், அமைச்சரவையைக் குற்றஞ்சாட்ட முடியாது." – என்றார்.

இப்போது நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயத்தைப் பேசி நேரத்தை வீணடிக்காமல், அது குறித்துப்பின்னர்பேசலாம்எனக் கூறி இருவருக்குமான முரண்பாட்டை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வந்தார் சத்தியலிங்கம். (ம)

# அரசின் நிர்ணய விலைக்கு அரிசியை விற்க முடியாது

## இறக்குமதியாளர்களும் விற்பனையாளர்களும் போர்க்கொடி

கொழும்பு, ஏப்.07

இறக்குமதி செய்யப்படும் அரிசியை அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு ஒருபோதும் விற்பனை செய்ய முடியாது என்று அரிசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் உறுதியாகத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:-

அரசு நிர்ணயித்துள்ள கட்டுப்பாட்டு விலைகளில் 10 தொடக்கம் 15 வீத அதிகரிப்புடனேயே அரிசியை விற்பனை செய்ய முடியும்.

வெளிநாட்டுச் சந்தையில் அரிசியின் விலை 10 தொடக்கம் 15 வீதம் வரை அதிகரித்திருப்பதாலும், அமெரிக்க டொலரின் பெறுமானம் அதிகரித்திருப்பதாலும் இந்த விலை அதிகரிப்பைத் தவிர்க்கமுடியாது.

கடந்த மாதம் 2 லட்சத்து 60 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. அதில் 2 லட்சத்து 10 ஆயிரம் தொன் விற்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்கு மேலும் 50 ஆயிரம் தொன் அரிசியை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பச்சையரிசி கிலோவொன்றுக்கு 70 ரூபாவும், நாட்டரிசிக்கு 72 ரூபாவும், சம்பாவுக்கு 80 ரூபாவும் கட்டுப்பாட்டு விலைகளாக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. -என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# சைட்டம் பணிப்போர் விவகாரம்

## இந்த வாரம் நூறாவது நாளை எட்டும் வைத்திய பீட மாணவர் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஏப்.07

மாலபே, தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) பிரச்சினை தொடர்பில் வைத்தியபீட மாணவர்கள் ஆரம்பித்த வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட் டம் இந்த வார இறுதியில் நூறாவது நாளை எட்டவுள்ளது என்று வைத்தியபீட மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

முதலில் ராஜரட்ட மற்றும் ராகம வைத்தியபீட மாணவர்கள் ஜனவரி 2 ஆம் திகதி தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ஜனவரி 9 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் கராப்பிட்டிய மாணவர்கள் அந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பேராதனை மாணவர்கள் ஜனவரி 17ஆம் திகதியும், கொழும்பு மாணவர்கள் பெப்ரவரி 6 ஆம் திகதியும்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் கொழும்பு, ராகம, ஸ்ரீ ஜயவர்தனபுர, கராப்பிட்டிய, ராஜரட்ட, மட்டக்களப்பு, பேராதனை மற்றும் யாழ்ப்பாண மருத்துவ பீடங்களின்மாணவர்கள் இணைந்துள்ளனர்.

அதேவேளை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய ஆறு மருத்துவ பீட மாணவர்களும் அவரவர் பீடங்களின் முன் னால் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இந்தியாவுக்கு எண்ணெய்த் தாங்கிகளை வழங்கும் ரணிலின் யோசனைக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஏப்.07

திருகோணமலைத் துறைமுகத்துக்கு அருகில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சுரவையில் முன்வைத்த யோசனைக்கு எதிர்ப்பு வெளியிடப் பட்டுள்ளது.

பிரதமர் அமைச்சரவையில் செவ்வாய்க்கிழமை முன்வைத்த அமைச்சரவை பத்திரத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

திருகோணமலை துறைமுகத்துக்கு அருகில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளில் 15 தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கிவிட்டு, ஏனைய தாங்கிகளை அரசு வைத்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி இதன் போது கூறியுள்ளார்.

இங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அரச வளங்களை இவ்வாறு விற்பனை செய்யும் போது மக்கள் மத்தியில் எதிர்ப்பு ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பொருளாதார மையங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று மக்கள் மத்தியில் சந்தேகம் இருப்பதால், இந்த நடவடிக்கைகளைவெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா இதன்போது யோசனையை முன்வைத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்களை நாங்கள் பார்த்து கொள்கிறோம். அமைச்சர்கள் அதற்காக விவாதித்துக் கொள்ளக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# இன்புளுவென்சா வைரஸ் தாக்கம் கிளிநொச்சியில் குறையவில்லை

## கர்ப்பவதிகளை அவதானமாக இருக்குமாறு சுகாதாரத்துறை அறிவுறுத்து

கிளிநொச்சி, ஏப்.07

கிளிநொச்சி மாவட்டத்தில் 592 பேர் பன்றிக் காய்ச்சலுக்கான சிகிச்சையை பெற்றுள்ளனர். எனினும் இன்புளுவென்சாவின் தாக்கம் குறைவடையவில்லை. இந்த நிலையில் கர்ப்பவதிகள் அவதானமாக இருக்க வேண்டும் என்று சுகாதாரத் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பன்றிக்காய்ச்சல் எனப்படும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் தற்போது இலங்கையில் பல மாவட்டங்களில் அதி தீவிரமாகப் பரவிவருகிறது.

முக்கியமாக தற்போது புதுவருட பண்டிகைக் காலம் ஆகையால் பொதுமக்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றுவரும்போது இந்த இன்புளுவென்சா பரவ வாய்ப்புகள் உள்ளன.

இது கர்ப்பிணித் தாய்மார், பிரசவத்தின் பின்னரான தாய்மார், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், முட்டுவருத்தம், நீரிழிவு உடையவர்களைத் தாக்கும்போது விளைவுகள் கடுமையாக இருக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதன் தாக்கம்கடந்த ஜனவரி 25ஆம் திகதியிலிருந்து கண்டறியப்பட்டது. அன்றிலிருந்து கடந்த 3 ஆம் திகதி வரையான 67 நாள்களுக்குள் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் 592 நோயாளர்கள் இந்த இன்புளுவென்சா நோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர். இவர்களில் 227 கர்ப்பவதிகளும், 38 சிறார்களும் அடங்குவர்.

இந்த 592 நோயாளர்களுள் 60 கர்ப்பவதிகள், 13 சிறுவர்கள் உட்பட 85 பேர் இன்புளுவென்சா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தமை கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இன்புளுவென்சா ஆபத்து கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் குறைவடையவில்லை. இந்த நிலையில், எந்தவொரு கர்ப்பவதியோ அல்லது பிரசவத்தின் பின்னரான தாயாரோ காய்ச்சல் ஏற்பட்டவுடன் அருகிலுள்ள அரச மருத்துவமனையை நாடுங்கள்.

அங்கிருந்து மாவட்டப் பொது மருத்துவமனைக்குப் பாதுகாப்பாகவும் உடனடியாகவும் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.- என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-70)




## நன்மை செய்து, உண்மைக்குச் சான்று பகருங்கள்

பரிசேயர்களுக்கும், தலைமைக் குருக்களுக்கும் கலிலேயர்கள் என்றாலே மோசமானவர்கள், "கீழானவர்கள்" என்று சொல்லி அவர்களிலிருந்து இறைவாக்கினர்கள் யாரும் வர முடியாது என்று நம்பினார்கள். ஆனால் கலிலேயாவிலிருந்தும் உயர்வானது வரக் கூடும் என்பதை எண்பித்தவர் இறைமகன் இயேசு பிறப்பின் அடிப்படையிலும் பின்னணியின் அடிப்படையிலும் ஒருவரைத் தவறாகக் கருதுவது தவறு என்பதே இயேசு சுட்டிக் காட்டும் பாடம்.

தாமரை சேற்றில் பிறந்தாலும் அது சேற்றிலே இருந்து விடுவதில்லை. தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப தன் உயரத்தைக் கூட்டிக் கொண்டே போகிறது. குடும்பம், மற்றும் சமூகப் பின்னணி எதுவாக இருந்தாலும் ஒரு மனிதன் உயர் நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கைச் செய்தியைத் தருவதுதான் தாமரை. இது போன்றதே முயற்சி உடையோரின் உயர்ச்சியாகும்.

நன்மை செய்வோர் தீமையை, சவால்களைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும். நன்மை செய்பவர்களுக்கு எதிரிகள் அதிகம். நன்மை செய்பவர்கள் நேர்மையாக வாழ்பவர்கள். அவர்கள் தனிமையை அனுபவிக்க நேரிடும். ஆனால், அவர்களை ஒருவரும் அழிக்க முடியாது. ஏனெனில் கடவுள் அவர்கள் பக்கம் இருக்கின்றார். அவர் நேர்மையோடு தீர்ப்பிடுபவர் மட்டுமல்ல அனைவரது இதயச் சிந்தனைகளையும் சோதித்து அறிபவர். அவரவர் செயலுக்கேற்ப அனைவரையும் தீர்ப்பிடுபவர்.

ஆகவே, எமது வாழ்வில் வரும் சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தாலும் நன்மை செய்வதை - உண்மைக்குச் சான்று பகர்வதை விட்டுவிடக் கூடாது; வாழ்வில் சோர்வடையக் கூடாது.

எமக்கெதிராகச் செயற்படுபவர்கள் மற்றும் எம்மைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் இன்றைய நாளிலே மன்றாடுவோம். அவர்கள் மனமாற்றம் பெற்று உண்மைக்குச் சான்று பகர்பவர்களாக வாழத் துணை நிற்போம்.

செல்வி நூட்குமார் தனுஜா

# காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாக சாட்சியமளிக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஏப்.07

குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்கள், நீதிமன்றத்தில் பிரசன்னமாகாமல் வெளிநாட்டிலிருந்து காணொலித்தொழில்நுட்பத்தின் ஊடாக சாட்சியமளிப்பதற்கு ஏற்ற சட்டத்திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கிகாரமளித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரமொன்றுக்கு அமையவே அமைச்சரவை இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் தொடர்பிலான 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கசட்டத்திலேயே இது சம்பந்தமான திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

அந்த வகையில், குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகாமல் நாட்டுக்கு வெளியில் இருந்து காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாக சாட்சியமளிப்பதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகளுடன் கூடியதாக மேற்படி சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூல வரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் நாடாளுமன்ற அனுமதிக்காகச் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்தச் சட்டத்திருத்தத்தின் பிரகாரம், இலங்கைக்கு வெளியில் தூர இடமொன்றில் இருக்கும் யாரேனும் பாதிக்கப்பட்ட ஒருவரோ அல்லது சாட்சியாளரோ அவரிருக்கும் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இருந்து காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாக சாட்சியமோ அல்லது வாக்குமூலமோ அளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.


(ஐ)

## 30ஆம் திகதியுடன் நிறுத்தப்படுகிறது

BBC தமிழ் பிபிசி தமிழோசை

1941ஆம் ஆண்டு முதல் சிற்றலை வரிசையில் ஒலிபரப்பப்பட்டு வந்த பி.பி.ஸி. தமிழோசை 76 வருட நீடித்த சேவைக்குப் பின் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் நிறுத்தப்படுகின்றது.

எனினும், இணையத்தளம் மூலம் அது தொடர்ந்து ஒலிபரப்பாகும். இலங்கையில் மட்டும் தனியார்வானொலியுடன்சேர்ந்து எவ்.எம். ஒலிபரப்பில் 5நிமிட பி.பி.ஸி. செய்தி ஒலிபரப்பப்படும்.




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 01 - 1953



மறைவு 07 - 04 - 2016

### சின்னத்தம்பி சண்முகநாதன்

(நெடுந்தீவு)

தந்தையாய்
அண்ணனாய்
தோழனாய்
அறிவாசானாய்
எண்ணங்களை ஏற்றி
ஒளி கொடுத்தவரே
ஓராண்டு கடந்தும்
ஆறவில்லை எம்துயரம்
ஓராயிரம் யுகம் கடந்தும்
ஓங்கும் புகழ் பெறுவாய்
நீங்காத நினைவுகளில்
நிறைந்திருக்கும் குலவிளக்கே!

குடும்பத்தினர்.

## வவுனியாவில் கறுப்புக்கொடியுடன் மோ.சைக்கிள் பேரணி






காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் சுழற்சி முறையில் முன்னெடுத்து வரும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 42 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து, கறுப்புக் கொடியுடன் மோட்டார் சைக்கிள் பேரணி ஒன்று நேற்று வவுனியா நகரில் நடத்தப்பட்டது.

பேரணியில் சென்ற இளைஞர்கள் பின்னர் உண்ணாவிரதம் நடைபெறும் இடத்தில் கவனவீர்ப்புப்போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

## சிவபூமி முதியோர் இல்லம்

தொல்புரம், சுழிபுரம்.

SIVA POOMI SCHOOL

# 10 ஆவது ஆண்டு பூர்த்திவிழா

காலம் :- 08.04.2017 சனிக்கிழமை, பி.ப 3.30 மணி

இடம் :- பாலச்சந்திரன் மண்டபம், சிவபூமி முதியோர் இல்லம்.

தலைவர் :- செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர் :- திரு.திருமதி கந்தையா நீலகண்டன் தம்பதிகள் (தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்)

சிறப்பு விருந்தினர்கள் :- திரு.நா.வேதநாயகன் தம்பதிகள் (அரச அதிபர், யாழ்.மாவட்டம்) திரு.வை.ஈழலிங்கம் தம்பதிகள் (இளைப்பாறிய கணக்காளர்)

★ ஆவண ஒளி நாடா வெளியீடு: "தரிசனம்"
★ சிறப்பு மலர் வெளியீடு : "சிவபூமி நிழல்"
★ கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்

அன்புடையீர்!
வணக்கம்

இறையருளாலும், பெரியவர்களின் ஆசியாலும் அன்பர்களின் ஆதரவாலும் எமது இல்லம் பத்தாவது ஆண்டில் கால்பதித்து சிறப்பாக இயங்கி வருகிறது. எமது இல்லத்தில் தற்போது 79 முதியோர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். எமது இல்லம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம்,
சுழிபுரம்.
தொ.பே 021 225 0085

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை
தொ.பே 021 222 7938

Rathee Event Management Proudly Presents
T24 EVENT MANAGEMENT

# யாழ் உணவுத் திருவிழா

TAMIL, SINGHALA & WESTERN FOOD
MUSICAL SHOW / LIVE DJ PERFORMANCE,
COMPETITION for WOMAN & KID's
7D CINEMA / KID's Play Zone

08 & 09 APRIL 2017 09am to 10pm
at JAFFNA MUNICIPAL GROUND

OFFICIAL PRINT MEDIA
VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
மித்திரன்
காலைக்கதிர்

OFFICIAL RADIO
தமிழ் TAMIL

JFF
ENTRANCE FREE

For Booking & Information
jff@remlk.com
0777 64 33 22 or 0778 74 64 63

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.